கத்தரி விவகாரம் முற்றுகிறது: பவார் மீது மத்திய அமைச்சர் பாய்ச்சல்

First Published : 22 Jan 2010 01:10:00 AM IST



புதுதில்லி, ஜன. 21: மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காயை வர்த்தக ரீதியில் பயன்படுத்துவது குறித்த விவகாரம் தேசிய அளவில் பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

இந்த கத்தரிக் காயைப் பயன்படுத்துவது தொடர்பாக மத்திய அமைச்சர்களுக்கு இடையே கருத்து மோதல் உருவாகி உள்ளது.

இந்த விஷயத்தில் மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் தெரிவித்த கருத்துக்கு மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் வெளிப்படையாக கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பவாருக்கு ஜெய்ராம் ரமேஷ் கடிதம் எழுதி உள்ளார். மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காயை வர்த்தக ரீதியில் பயிரிடுவது குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கு மத்திய அரசுக்கு எல்லா உரிமையும் உண்டு. இது பொது மக்களின் உடல் நலன் தொடர்புடைய விவகாரம் என்று கடிதத்தில் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காயை வர்த்தக ரீதியில் பயன்படுத்துவது பற்றி நிபுணர்கள் குழு எடுக்கும் முடிவே இறுதியானது. இதில் மத்திய அரசு செய்வதற்கு ஒன்றுமில்லை என்று அமைச்சர் சரத் பவார் புதன்கிழமை கூறியிருந்தார்.

இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கடிதம் எழுதி உள்ளார்.

மரபணு மாற்ற கத்தரிக் காயை வர்த்த ரீதியில் அனுமதிப்பது தொடர்பாக நாடு முழுவதும் பொது விவாதத்தை நடத்தி வருகிறேன். மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய்தான், முதல் மரபணு மாற்ற உணவுப் பயிராகும். எனவே இது குறித்து எழுப்பப்பட்டுள்ள சந்தேகங்கள், கவலைகளை நான் நன்கு அறிவேன்.

மரபணு மாற்ற உணவுப் பொருள்களுக்கு ஒப்புதல் அளிக்கும் நிபுணர் குழு சட்ட ரீதியான அமைப்பாக இருக்கலாம். ஆனால் பொது மக்களின் உடல் நலம் குறித்து கேள்வி எழுப்பப்படும்போது அதில் இறுதி முடிவு எடுக்க மத்திய அரசுக்கு முழு உரிமை உண்டு.

இந்த கத்தரிக் காய் குறித்து உரிய கருத்துகளைத் தெரிவிக்குமாறு மரபணு மாற்ற கத்தரி அதிகம் பயிரிடப்படும் மாநிலங்களான மேற்கு வங்கம், ஒரிசா, பிகார், மகாராஷ்டிரம் உள்பட 6 மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதி உள்ளேன். மேலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 50 விஞ்ஞானிகளிடமும் கருத்துக் கேட்டுள்ளேன்.

ஜனநாயக மாண்புகளை ஏற்று நடக்கும் நமது நாட்டில் கருத்தொற்றுமை மூலமே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை நீங்களும் (பவார்) ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

தற்போது நடந்து வரும் பொது விவாதம் வரும் ஜனவரி இறுதிவாக்கில் முடிந்துவிடும். பின்னர் நிபுணர்களின் கருத்துக்களையும் கேட்டு பிப்ரவரி 20-ம் தேதிக்குள் இறுதி முடிவுக்கு வர முடியும். அதன் பிறகு எனது அறிக்கையை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சமர்ப்பிப்பேன். அதுபோல் உங்களிடமும் சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆஸ0த்திடமும் எனது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். அதன் பிறகு இதில் இறுதி முடிவு எடுக்கலாம் என்று கடிதத்தில் அவர் கூறியுள்ளார்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக் காய் பயிரிட்டால் அமோக விளைச்சல் கிடைக்கும். மேலும் பூச்சி தாக்காது என்று வெளிநாட்டு நிறுவனங்களால் பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் இந்த கத்தரிக் காய் உடல் நலத்துக்குக் கேடு விளைவிப்பதோடு நமது நிலத்தின் வளத்துக்கும் கேடு விளைவிக்கும் என்று விவசாயிகள் சங்கத்தினரும் விஞ்ஞானிகளில் ஒரு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இதையடுத்து இந்த கத்தரிக் காயைப் பயன்படுத்துவது குறித்து பொது விவாதம் நடத்த மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## மரபணு மாற்ற உணவுப் பயிர்களை திணிக்க தமிழக அரசு முயற்சி: வைகோ குற்றஞ்சாட்டு

First Published : 22 Jan 2010 02:34:00 AM IST



சென்னை, ஜன.21: மக்களின் விருப்பத்தை அறியாமல் மரபணு மாற்றப்பட்ட உணவுப் பயிர்களை மக்களிடம் திணிக்க தமிழக அரசு முயல்வதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மரபணு மாற்ற உணவுப் பயிர்களை இந்தியாவில் அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பது குறித்து மக்களின் கருத்தறியும் கூட்டங்களை மத்திய அரசு இந்தியாவில் 7 இடங்களில் நடத்துகிறது.

ஆனால் தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மக்களிடம் கருத்துகளைக் கேட்காமல், மரபணு மாற்றப் பயிர்களை அனுமதிப்பதற்கு ஆதரவாகப் பேசுகிறார்.

ஒரு கருத்துத் திணிப்பை தமிழக அரசு நடத்துகிறது.

மரபணு மாற்ற விதைகள் விரைவாகப் பயன்பாட்டுக்கு வர வேண்டும்' என்று மான்சாண்டோ நிறுவனத்தின் ஏஜெண்ட் போல தமிழக அரசும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமும் தொடர்ந்து கருத்துகளை வெளியிட்வருகின்றன.

மரபணு மாற்ற உணவுப் பயிர்கள் குறித்து மத்திய அரசு தமிழகத்தில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தவில்லை. இந்நிலையில் தமிழகத்திலும் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி வற்புறுத்தாதது ஏன்?

மரபணு மாற்ற பயிர்கள் கூடாது என்ற ஆராய்ச்சியாளர்களின் நிலைப்பாட்டை, தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கும் கருத்துகளைப் பதிவு செய்யக் கூடாது என்று முதல்வர் கருணாநிதி கருதுவதுதான் இதற்கு காரணம். இது குறித்து கருணாநிதி எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை.

இந்தியாவில் முதல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பயிர் கத்தரிக்காய். இதை உண்பதால் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதை முழுமையாக ஆராயாமல், குறுகிய கால ஆய்வுகளின் அடிப்படையில் மரபணு மாற்ற கத்தரிக்காயை அனுமதிப்பது தவறானது.

மரபணு மாற்ற பருத்தி விதைகளைப் பயன்படுத்தியதால் மகாராஷ்டிர மாநிலத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. ஆடு, மாடுகள் செத்துப் போயின. இது பருத்திப் பயிர்த் தொழிலுக்கே பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், மரபணு மாற்ற கத்தரிக்காயை விளைவித்தால், அது குணப்படுத்த இயலாத உடல் நலக் கேடுகளை ஏற்படுத்தும் என்பதை இத்துறையின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என்றார் வைகோ.

### வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்புக்கு காப்பீடு

First Published : 21 Jan 2010 07:07:25 AM IST

திண்டுக்கல், ஜன. 20: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்து விதமான உணவுப் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் வருடாந்திர வணிக தோட்டக் கலைப் பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது. அனைத்து வகையான இயற்கைச் சீற்றங்கள் மற்றும் வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதலால் ஏற்படும் மகசூல் இழப்புக்கு இத் திட்டம் மூலம் காப்பீடு கிடைக்கும்.

குத்தகைதாரர்கள் வங்கிக் கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் உள்பட அனைத்து விவசாயிகளும் இத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். சராசரி மகசூலின் 150 சதவீதம் வரை காப்பீடு செய்ய முடியும். தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் மத்திய, மாநில அரசின் பரிந்துடையுடன் அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா மூலம் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை இத் திட்டத்தின் மூலம் ரூ. 116 கோடி பிரிமியம் பெறப்பட்டுள்ளது. 2000 முதல் 2008 ஆம் ஆண்டு வரை ரூ. 1,171 கோடி இழப்பீட்டுத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 8 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு 50 சதவீதம் பிரிமியத்தில் மானியம் அளித்துள்ளது. விவசாயிகள் அவரவர் கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும். மேலும் இழப்பீடு பெறும்போது அந்த வங்கியின் மூலம் அவரது கணக்கில் வரவு வைக்கப்படும்.

நஷ்டஈடு வழங்கும் முறை: ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரத்திலும், பிர்காவிலும் மாநில அரசின் விவசாயத் துறையினால் பயிர் அறுவடை காலத்தில் சோதனைகள் நடத்தப்பட்டு, நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும்போது நடப்புப் பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைதிருக்கின்றதோ, அந்த விகிதப்படி அந்த வட்டாரத்தில் உள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் காப்பீடு செய்த தொகைக்கு ஏற்பட நஷ்டஈடு வழங்கப்படும். பயிர் கடன்பெறாத விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன், கணினி சிட்டா அல்லது அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து சான்றிதழ் பெற்று அவர்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரிமியத்தை குறிப்பிட்ட தேதிக்கு முன் செலுத்த வேண்டும். முன்மொழிவுப் படிவங்கள் விவசாயத் துறையிடமும், கூட்டுறவு வர்த்தக வங்கியிலும் பெறலாம் என அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனியின் மண்டல மேலாளர் சி. அன்பரசு தெரிவித்துள்ளார்.

**விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு கூடுதல் அரிசி, கோதுமை ஒதுக்கீடு: மத்திய அரசு**

First Published : 22 Jan 2010 02:04:49 AM IST

புதுதில்லி, ஜன. 21: விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இம்மாதமும்,அடுத்த மாதமும் ரேஷன் அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் அளவோடு சேர்த்து கூடுதலாக 10 கிலோ அரிசி மற்றும் கோதுமை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

தில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்த கூடுதல் உணவு தானிய ஒதுக்கீடு அந்தோதயா அன்ன யோஜனா மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கும் பொருந்தும். இதற்காக 10.64 லட்சம் டன்கள் அரிசி மற்றும் 25.43 லட்சம் டன் கோதுமை கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

மார்ச் மாதத்துக்குள் இதனை மாநில அரசுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தக் கூடுதல் உணவு தானிய ஒதுக்கீடானது, ஒரு கிலோ கோதுமை ரூ.10.80 மற்றும் ஒரு கிலோ அரிசி ரூ.15.37 என்ற விலையில் வழங்கப்படும்.

கல்வி உதவித்தொகை: அறிவியல் மற்றும் தொழில் ஆய்வுக்கான கவுன்சிலான சிஎஸ்ஐஆர் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவான யூஜிசி-ன் தேசிய தகுதி தேர்வின் மூலம் இளநிலை ஆராய்ச்சி கல்வி உதவித் தொகைக்கான மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

10-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சிஎஸ்ஐஆர்-ன் தேசிய தகுதித் தேர்வின் மூலம் சுமார் 6000 மாணவர்கள் பயனடைந்தனர். இது 11-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 12 ஆயிரமாக அதிகரிப்படுகிறது. இதன்படி ரூ.444.34 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

தேசிய அறிவுசார்நெட்வொர்க்: தேசிய தகவல் மையத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தேசிய அறிவுசார் நெட்வொர்க்கை அமைப்பதற்கு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுக்கான அமைச்சரவைக் குழு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது.

ரூ.2,992 கோடியில் மாதிரி கல்லூரிகள்: கல்வி ரீதியாக பின்தங்கியுள்ள 374 மாவட்டங்களில் மாதிரி இளங்கலை கல்லூரி மத்திய நிதியுதவியுடன் அமைக்கப்படும். இந்த கல்லூரிக்கான நிலத்தை மாநில அரசுகள் இலவசமாக வழங்கும். மூலதனச் செலவில் எஞ்சிய தொகையை மாநில அரசுகள் ஏற்கும். இந்த புதிய திட்டத்தின் கீழ் ஒரு கல்லூரிக்கு ரூ.8 கோடி என்ற அளவில் 374 மாவட்டங்களிலும், இக்கல்லூரிகளை அமைக்க ரூ.2,992 கோடி நிதி தேவைப்படும்.

கிராமப்புறங்களில் நகர்ப்புற வசதிகள்: கிராமப்புறங்களை மேம்படுத்த ரூ.248 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் புதுமையான முயற்சியாக பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும்.

திட்டச் செலவில் 35 சதவீதம் வரை மூலதன மானியம் வழங்கப்படும். பதினோராவது திட்ட காலத்தில் 7 முதல் 8 முன்னோடித் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும். திட்டத்தை உறுதியுடன் நடைமுறைப்படுத்துவை உறுதி செய்யும் வகையில் தனித்தனி ஒப்பந்தங்களே செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### உயிர் உர விற்பனைக்கு அனுமதி பெற அறிவுறுத்தல்

First Published : 22 Jan 2010 04:55:06 AM IST

கரூர், ஜன.21: உயிர் உரங்களை உற்பத்திசெய்து, விற்க முறையான அனுமதி பெற வேண்டும் என்று வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கரூர் வேளாண்மை இணை இயக்குநர் கே.ஜெகதீசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

""கரூர் மாவட்டத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இயற்கை உரம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுவந்தது. கூலியாட்கள் தட்டுப்பாடு, வேளாண்மை இயந்திரங்கள் அறிமுகம், கால்நடைகளின் எண்ணிக்கை குறைவு, ரசாயன உரங்கள் அறிமுகம் ஆகியவற்றால் இயற்கை உரத்தின் பயன்பாடு காலப்போக்கில் குறைந்துவிட்டது.

இயற்கை உரத்தின் பயன்பாடு குறைந்ததால் மண்ணிலுள்ள நுண்ணியிர்களின் எண்ணிக்கை குறைந்து மண் வளம் குன்றி, உற்பத்தித் திறன் குறையத் தொடங்கியது. இந்நிலையை உணர்ந்த வேளாண் விஞ்ஞானிகள் மண்ணின் வளத்தை மேம்படுத்தி, உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்ற நோக்கில் அங்கக உரங்களின் பயன்பாட்டையும், உயிர் உரங்களை கண்டுபிடித்து அதனை வணிக ரீதியில் உற்பத்தி செய்து பயன்படுத்தவும் ஊக்குவித்து வருகின்றனர்.

தற்போது அங்கக உரங்களை முன்னோடி விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்து பயன்படுத்தி, விற்பனை செய்தும் வருகின்றனர். சில தனியார் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் போன்றவை மண்புழு உரங்கள், நகரக் கழிவு உரங்கள், உயிர் உரங்கள் ஆகியவற்றை வணிக ரீதியில் தயார் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

மத்திய அரசின் அறிவிக்கைபடி அங்கக மற்றும் உயிர் உரங்களுக்கு விவரக்குறிப்பீடு மற்றும் மேற்படி உரங்களுக்கு மார்ச் 2008 முதல் தடையில்லாச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி அங்கக மற்றும் உயிர் உரங்கள் தயார் செய்து விற்பனை செய்யும் விவசாயிகள், தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுவினர் அனைவரும் உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1985ன் படி உரிமம் பெற்ற பின்னரே உற்பத்தி செய்து விற்பனை செய்ய வேண்டும். உரிமம் பெறுவது சம்பந்தமாக தங்களது வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) அலுவலர்களை தொடர்புகொள்ள வேண்டும்."

**திருக்காட்டுப்பள்ளி உழவர் சந்தை சீராகுமா? இரா. குழந்தை வடிவேல்**
First Published : 22 Jan 2010 04:42:27 AM IST

திருக்காட்டுப்பள்ளி, ஜன. 20: திருக்காட்டுப்பள்ளியில் நலிவடைந்த உழவர் சந்தையை சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது.

விவசாயிகளே பொதுமக்களுக்கு நேரடியாக காய்கறிகளை விற்பனை செய்ய தமிழக அரசால் தொடங்கப்பட்ட மகத்தான திட்டமே உழவர் சந்தை.

கடந்த பிப். 2009-ல் தமிழக அரசு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை தஞ்சாவூர் கிளை சார்பில் ரூ. 22.50 லட்சத்தில் தொடக்கி வைக்கப்பட்டது திருக்காட்டுப்பள்ளி உழவர் சந்தை. இந்தச் சந்தையின் உள்ளே 20 கடைகளும், வெளியே 25 கடைகளும் கட்டப்பட்டன.

திருக்காட்டுப்பள்ளி, ஒன்பத்துவேலி, வளம்பக்குடி, நடுப்படுகை போன்ற பகுதிகளில் 45 விவசாயிகளைத் தேர்வு செய்து, அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி விற்பனையைத் தொடக்கி வைத்தனர்.

ஆனால், தொடங்கப்பட்ட ஒரு மாதத்திலேயே விவசாயிகளின் வருகை குறைந்தது. தற்பொழுது கடந்த 5 மாதங்களாக ஒன்பத்துவேலியைச் சேர்ந்த தா. பாலு (55) என்ற விவசாயியும், எப்போதாவது இன்னொருவரும் மட்டுமே காய்கறி விற்பனை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயி தா. பாலு கூறியது:

முதலில் அனைத்து விவசாயிகளும் காய்கறிகளைக் கொண்டு வந்து விற்றனர். தற்போது 2 பேர் மட்டுமே வருகிறோம். உழவர் சந்தையே வெறிச்சோடிக் கிடக்கிறது. சந்தையை இந்த இடத்தில் அமைத்ததே தவறு.

காரணம், இந்த சந்தைக்கு அருகில் காய்கறி, வாழைத்தார், இலை ஏலம் விடும் சந்தை உள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறிகளை இந்தச் சந்தையில் ஏலம் விட்டு 1 மணி நேரத்தில் பணம் பெற்றுச் செல்கின்றனர்.

மேலும், உழவர் சந்தையின் 15 அடி தூரத்தில் சுமார் 40 காய்கறி கடைகளும் உள்ளன. அதோடு, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி அலுவலகம் முதல், சந்தை வரையிலும் தரைக் கடைகள் உள்ளன. காய்கறி வாங்குவோர் இதுமாதிரியான கடைகளையே நாடுகின்றனர். மற்ற கடைகளைவிட கிலோவுக்கு 1 ரூபாய் குறைத்துக் கொடுத்தும் மக்கள் இங்கு வருவதில்லை.

மேலும், உழவர் சந்தையைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் உள்ளது. ஒரு வழிப் பாதைதான் உள்ளது. ஆகவே, பொதுமக்களைக் கவர, உழவர் சந்தையைச் சுற்றிலும் கூடாரம் அமைத்துத் தர வேண்டும். அருகிலுள்ள ஏலக்கடையில் காய்கறிகளை ஏலம் விடுவதைத் தடை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் அனைத்து விவசாயிகளும் இங்கு வந்து விற்பனை செய்வார்கள் என்றார் பாலு.

இதுகுறித்து உழவர் சந்தை ஊழியர் ஒருவர் கூறியது:

அனைத்து விவசாயிகளையும் உதவி வேளாண் அலுவலர், நிர்வாக மேலாளர் உள்ளிட்டோர் சந்தித்து வருகிறார்கள். இருந்தும், அவர்களுக்கு இங்கு வந்து காய்கறி விற்பனை செய்ய ஆர்வம் இல்லை என்றார் அவர்.

எனவே, இந்த உழவர் சந்தையை மேம்படுத்த இங்குள்ள விவசாயிகளை மாவட்ட நிர்வாகம் அழைத்து கருத்து கேட்டு, கடைகளைத் தொடங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக எழுந்துள்ளது.

அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் முதல்வர் கருணாநிதி பேசுகையில், தமிழகத்திலுள்ள 148 உழவர் சந்தைகளில் 14 சந்தைகள் நலிந்த நிலையில் உள்ளன. அவற்றை மேம்படுத்துவதற்கான பணியில் அரசு இயந்திரம் செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

எனவே, திருக்காட்டுப்பள்ளி உழவர் சந்தைக்கு மாவட்ட நிர்வாகம் புத்துயிர் ஊட்ட வேண்டும் என்பதே விவசாயிகள், பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

### புவி வெப்ப மயமாவதைத் தடுக்க மரக் கன்றுகளை நட வலியுறுத்தல்

First Published : 22 Jan 2010 03:06:42 AM IST

திருவண்ணாமலை, ஜன. 21: புவி வெப்பமயமாவதைத் தடுக்க அதிக மரக் கன்றுகளை நட வேண்டும் என ஜீவா வேலு மெட்ரிக் பள்ளி நிர்வாக இயக்குநர் டாக்டர் எ.வ.வே. கம்பன் வலியுறுத்தி உள்ளார்.

ஜீவா வேலு மெட்ரிக் பள்ளி சாரணர் இயக்கம், சாலை பாதுகாப்பு இயக்கம் ஆகியன சார்பில் திருவண்ணாமலை அருகேயுள்ள கீழ்கச்சிராப்பட்டு கிராமத்தில் புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடந்தது.

முகாமைத் தொடங்கி வைத்து டாக்டர் கம்பன் பேசியது:

பள்ளி மாணவர்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருந்தால்தான், கிராம மக்களுக்கும் புவி வெப்பமயமாதலின் பாதிப்புகள் குறித்து விவரிக்க முடியும். புவி வெப்பமயமாவதை தடுக்க ஓரே வழி அதிக மரக் கன்றுகளை நடுவதுதான். மரங்களால்தான் கார்பன் டை ஆக்சைடை குறைக்க முடியும் என்றார்.

பின்னர் கிராம மக்களுக்கு 300 மரக்கன்றுகளையும், பள்ளி மாணவ, மாணவியருக்கு 200 மரக்கன்றுகளையும் அவர் வழங்கினார்.

மாணவர்கள் கிரிதர் சீனிவாசன், நிவேதிதா ஆகியோர் மரக்கன்று நடுவதின் அவசியம் குறித்து விவரித்தனர். பள்ளி முதல்வர் ஜே.டி.ஜான்சன், ஊராட்சித் தலைவர் ஜோதி, தலைமை ஆசிரியர் சிவ. சுப்பிரமணியன், ஜீவாவேலு பள்ளிச் செயலர் பரத் ஆகியோர் பங்கேற்றனர். சாரண ஆசிரியர் ராமமூர்த்தி இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

### விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்

First Published : 22 Jan 2010 03:04:59 AM IST

திருவண்ணாமலை, ஜன. 21: பெரணமல்லூர்

ஒன்றியம், எறும்பூர் கிராமத்தில் வேளாண் துறை விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம் புதன்கிழமை நடந்தது.

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் என்.கோமதிநாயகம் தலைமை தாங்கி, விதை உற்பத்தி, செம்மை நெல்சாகுபடி மூலம் தனிநபர் வருவாயை அதிகரிப்பது குறித்து பேசினார்.

பெரணமல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் கே.விஸ்வநாதரெட்டி நெல்விதை நேர்த்தி, உயிர் உர நேர்த்தி, வேளாண் மானிய திட்டங்கள் குறித்து விவரித்தார்.

வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், சண்முகவேல், உதவி வேளாண் அலுவலர்கள் சுப்பிரமணி, குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### ஜன. 30-ல் கோகோஸ் பண்ணையில் தென்னை வளர்ப்பு இலவசப் பயிற்சி

First Published : 22 Jan 2010 04:50:15 AM IST

திருச்சி, ஜன. 21: எல்லா வகை மண்ணிலும் வளரும் தென்னை பற்றிய தொழில்நுட்ப இலவச பயிற்சி வரும் ஜன. 30-ம் தேதி திருவையாறு, அரசூர் கிராமத்திலுள்ள தென்னை ஆராய்ச்சி மையத்தில் (கோகோஸ் பண்ணை) நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக தென்னை ஆராய்ச்சியாளரும், பத்மாவதி செல்வம் அறக்கட்டளைத் தலைவருமான டாக்டர் வா.செ. செல்வம் கூறியது:

"தென்னந்தோப்புகளில் உழவு செய்யும்போது வேர்கள் அறுபடாமல் உழவு செய்து புல், பூண்டுகளை அகற்ற வேண்டும். டிராக்டரை மரத்துடன் ஒட்டி ஓட்டி உரசக் கூடாது. மரத்தில் காயம்பட்ட இடத்திலிருந்து பிசின் வடியும். சிவப்பு கூண்டு வண்டு புகுந்துவிடும். மரம் சாக வாய்ப்புள்ளது. இதுதொடர்பான நேரடிப் பயிற்சி வழங்கப்படும்.

மழைநீரில் பூமிக்குள் உள்ள உப்புகள் கரைந்து மேல் மண்ணில் படிந்து கார அமிலத்தன்மையில் மாற்றம் உண்டாகியிருக்க வாய்ப்புள்ளது.

மண்புழுக்களும், நுண்ணுயிர்களும் சாகவோ அல்லது மலடாகவோ வாய்ப்புள்ளது. தென்னை வளராது என்ற தரிசாகக் கிடக்கும் இடத்தில் தென்னை வளர்க்கும் தொழில்நுட்பப் பயிற்சி கொடுக்கப்படும் என்றார் செல்வம்.

### குறைந்த மின் அழுத்தம்: விவசாயிகள் அவதி

First Published : 22 Jan 2010 12:00:00 AM IST

திருக்கோவிலூர், ஜன. 21: திருக்கோவிலூர் வட்டத்துக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 2 நாள்களாக குறைந்த மின் அழுத்தம் நிலவி வருவதால் விவசாயிகள் மற்றும் கிராம பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

÷திருக்கோவிலூர், காரணை பெரிசானூர், அரியலூர் ஆகிய மின் நிலையங்களுக்கு உட்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் 2 தினங்களாக குறைந்த மின் அழுத்தம் நிலவி வருகிறது.

÷இதனால் இரவு நேரங்களில் போதிய அளவுக்கு வெளிச்சம் இல்லாத நிலையில் மக்கள் அவதிப்படுவதோடு, பள்ளி மாணவர்களும் கல்வி பயில முடியாத நிலை உள்ளது.

÷அதேபோல் ஒரு சில நேரங்களில் சீரான மின் சப்ளை இருப்பதாக கருதி பாசனத்துக்கான மின் மோட்டாரை விவசாயிகள் இயக்குகின்றனர்.

÷இதையடுத்து மோட்டார் இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில் எதிர்பாராத விதமாக அடிக்கடி குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது. இதனால் இப்பகுதியில் உள்ள பெரும்பாலான மின் மோட்டார்கள் பழுதடைந்துள்ளது.

÷அதேபோல் மேற்கண்ட மின் நிலையங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களிலும் குடிநீருக்கான மின் மோட்டார்கள் இயக்கப்படாத நிலையில் பெரும்பாலான கிராமங்களில் மக்கள் குடிநீரின்றி தவித்து வருகின்றனர்.

÷மேலும் குடிநீருக்கான சில மின் மோட்டார்களும் பழுதடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

÷குறைந்த மின் அழுத்தம் இரவு நேரத்தை காட்டிலும் பகல் நேரத்தில் அதிகளவில் ஏற்படுவதால் அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகள், வங்கிகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட பெரும்பாலான இடங்களில் பொதுமக்கள் உள்ளிட்டோர் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

÷இது குறித்து திருக்கோவிலூர் கோட்ட மின் பொறியாளர் வீரராகவனிடம் கேட்டபோது, விழுப்புரத்தில் உள்ள ஆட்டோ டிரான்ஸ்பார்மர் பராமரிப்புப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

÷இதையடுத்து சேலம் மாவட்டத்தில் உள்ள தேவியாகுறிச்சியில் இருந்து இப்பகுதிக்கு தற்போது மின் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால்தான் 2 தினங்களாக இப்பகுதியில் குறைந்த மின் அழுத்தம் ஏற்படுகிறது.

÷விழுப்புரத்தில் நடைபெற்று வரும் பராமரிப்புப் பணி முடிந்தால் மின் விநியோகம் வழக்கம்போல் சீராக இருக்கும் என்றார்.

÷பாசன வசதி இன்றி அவதிப்படும் விவசாயிகள், கல்வி பயில முடியாமல் தவிக்கும் பள்ளி மாணவர்கள் மற்றும் வணிகர்கள் உள்ளிட்டவர்களின் எதிர்பார்ப்பை மின்துறை அதிகாரிகள் நிறைவேற்ற விரைந்து நடவடிக்கை வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

## தேவகோட்டை பகுதியில் நெல் அறுவடை இயந்திரங்கள்

First Published : 21 Jan 2010 07:23:20 AM IST

தேவகோட்டை,ஜன.20: தேவகோட்டை பகுதியில் கதிர் அறுக்கும் இயந்திரங்கள் வந்து குவிந்துள்ளன. கடந்த ஆண்டு பொங்கல் சமயத்தில் அறுவடை முடிந்துவிட்டது. ஆனால் இந்த ஆண்டு பருவமழை தாமதமாகப் பெய்ததால் விவசாயப் பணிகள் மிகவும் தாமதமாகத்தான் துவங்கின.

தற்போதுதான் அறுவடை செய்யும் நிலை வந்துள்ளது. பெரும்பாலான இடங்களில் இன்னும் பதினைந்து நாள்கள் கழித்துதான் அறுவடை செய்ய முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற அறுவடையை கருத்தில்கொண்டு அறுவடை செய்யும் இயந்திரங்கள் வடக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரத் துவங்கி விட்டன. நாள் ஒன்றுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட இயந்திரங்கள் தேவகோட்டை வழியாக ராமநாதபுரம் மாவட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்குச் செல்கின்றன.

**தலையங்கம்:நாம்தான் கிடைத்தோமா?**

First Published : 22 Jan 2010 12:32:00 AM IST

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் விவகாரம் முற்றி சந்திக்கு வந்திருக்கிறது. மரபணு மாற்றக் கத்தரிக்காயை இந்தியாவில் பயன்படுத்தலாமா, கூடாதா என்பதை இறுதியாக முடிவு செய்யவேண்டியது அதற்கான நிபுணர் குழுதான் என்று வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் கூற, இல்லையில்லை இறுதி முடிவை எடுக்க வேண்டியது மத்திய அரசுதான் என்று அடுத்த நாளே மறுத்து நமது வயிற்றில் பாலை வார்த்திருக்கிறார் சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

தேசியவாத காங்கிரஸ் என்ற தோழமைக் கட்சியின் தனிப்பெரும் தலைவர் சரத் பவார். அவருடைய சமீபகால அரசியல் நடவடிக்கைகள், மக்கள், அதிலும் குறிப்பாக விவசாயிகள், நலன் சாராது கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அதிபர்கள், சர்க்கரை மொத்த வியாபாரிகள், இறக்குமதியாளர்கள் ஆகியோர் நலன் சார்ந்து இருப்பது விமர்சனத்திற்குள்ளாகி இருக்கிறது. நெல், கோதுமை, கரும்பு சாகுபடியாளர்களுக்குக் கட்டுபடியாகும் கொள்முதல் விலையை வாங்கித் தருவதில் அதிக ஆர்வம் காட்டாத சரத் பவார், இறக்குமதி கோதுமைக்குக் கூடுதல் விலை தருவதற்குத் தயக்கம் இல்லை என்று வெளிப்படையாகவே அறிவித்து கோதுமை உற்பத்தியாளர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார்.

இதையெல்லாம் கூறக் காரணம், மரபணு மாற்றப்பட்ட கத்தரி விஷயத்தில் நிபுணர் குழுவின் முடிவே இறுதியானது என்று கூறி, இந்த நாட்டுக்கு மிகப்பெரிய தீங்கு இழைக்கப்பட காரணமாக அவர் இருந்துவிடுவாரோ என்கிற அச்சம்தான். நல்லவேளை ஜெய்ராம் ரமேஷ் குறுக்கிட்டு அவருக்குக் கடிவாளம் போட்டிருக்கிறார்.

பி.டி. கத்தரிக்காய் விதைகளை "மேகோ' (மகாராஷ்டிர உயர்விளைச்சல் விதை நிறுவனம்) என்கிற நிறுவனம் தயாரிக்கிறது. அமெரிக்க பி.டி. நிறுவனம் தான் மகாராஷ்டிரத்தில் இப்படி ஒரு புதிய பெயரில் சில இந்தியர்களை முன்னிலைப்படுத்தி ஓர் இந்திய நிறுவனம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வேடிக்கை என்னவென்றால் மரபணு மாற்றப்பட்ட இந்தக் கத்தரிக்காய் விதை உலகின் எந்தப் பகுதியிலும் இதுவரை பெருமளவு நிலப்பரப்பில் விதைக்கப்பட்டு நேரடியாக சோதிக்கப்படவே இல்லை என்பதுதான்.

மரபணு மாற்றப்பட்ட பருத்தியாவது பரவாயில்லை. கத்தரிக்காய் என்பது நேரிடையாக மக்களால் உணவாகச் சாப்பிடப்படுவது. இதில் நச்சுக்கலப்பு இருந்தால் அதன் விளைவு எத்தகையதாக இருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மேலும், அமெரிக்காவிலும் ஏனைய மேலைநாடுகளிலும் பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர்கள் விவசாயத்துக்காக இருக்கும்போது, மரபணுப் பரிசோதனைகளை அங்கே நடத்தாமல் இந்தியா போன்ற ஏமாளி நாடுகளில் நடத்தி, நம்மைப் பரிசோதனைக் களமாக்குவதன் ராஜதந்திரம், சிறந்த அரசியல் ராஜதந்திரியான சரத் பவாருக்கு ஏன் தெரியவில்லை என்கிற கேள்வியும் எழுகிறது.

இதே பி.டி. ரக பருத்தி விதைகளை வாங்கி சாகுபடி செய்து, சாகுபடி பொய்த்ததால் கடனில் மூழ்கி தற்கொலை செய்துகொண்ட இந்திய விவசாயிகள் எண்ணிக்கை சில ஆயிரம். அவர்களுக்கு இந்த நிறுவனம் எந்த நஷ்டஈட்டையும் அளித்ததாகத் தகவலே கிடையாது. ஆலைகளில் இந்தப் பருத்தியைக் கையாண்ட தொழிலாளர்களுக்கு ஒருவித அரிப்பும், இதர உடல் உபாதைகளும் ஏற்பட்டது பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. பசுமைப்புரட்சியை இந்த நாட்டில் கொண்டு வந்தபோது மிகவும் பெருமிதம் கொண்ட நமக்கு அதன் தீமைகள் புரிய பல ஆண்டுகள் பிடித்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மரபணு மாற்றிய கத்தரிக்காயைப் பன்னாட்டு நிறுவனம்தான் இந்தியாவில் அறிமுகப்படுத்தவிருக்கிறது. அதன் நோக்கம் இந்தியர்கள் கத்தரிச் சாகுபடியில் அமோக லாபம் சம்பாதிக்க வேண்டும், பூச்சி அரிக்காத காய்கறிகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும், ஓர் ஏக்கருக்கு இப்போது கிடைப்பதைவிட 3 மடங்கு 5 மடங்கு என்று

கத்தரிக்காய் விளைய வேண்டும் என்பதெல்லாம் அல்ல. இவையெல்லாம் வியாபார உத்திக்காகக் கூறப்பட்டாலும் நம்முடைய பாரம்பரிய கத்தரிக்காய் ரகங்களைப் புழக்கத்திலிருந்து அகற்றுவதுதான் அவர்களின் நோக்கம். அதன் பிறகு கத்தரிக்காய் என்றாலே நாம் ஏதாவது ஒரு பன்னாட்டு நிறுவனம் தயாரித்துத்தரும் ரகத்தைத்தான் வாங்க வேண்டியிருக்கும். அப்போது அதற்குத் தரும் விலையும் அமோகமாக இருக்கும்.

அதைவிடுங்கள், அதனால் நிலத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படக்கூடிய கெடுதல்களை எப்படி முன்கூட்டியே அனுமானிப்பது? நாம் காரணம் இல்லாமலேயே சந்தேகப்படும் பத்தாம்பசலிகளாகவே கூட இருந்து தொலைப்போம், நாளை இதனால் கெடு விளைவுகள் ஏற்பட்டால் நம்மைக் காப்பாற்றப் போவது யார்? போபாலில் பல்லாயிரக்கணக்கானவர்களின் உயிரையும் வாழ்வையும் உறிஞ்சிய யூனியன் கார்பைடு என்ற பன்னாட்டு நிறுவனம் இன்று எங்கே? அதன் தலைவராக இருந்த ஆண்டர்சன் எங்கே? அவரைக் கொண்டுவந்து நீதியின் முன் நிறுத்த மன்மோகன் அரசு எடுத்த தீவிர முயற்சிகள் என்ன? பாதிக்கப்பட்டவர்கள் இப்போதும் முழுமையான நஷ்டஈடு கிடைக்காமல் தவிக்கிறார்களே, அவர்களுக்கு விடிவுதான் என்ன?

நாளை மரபணு கத்தரிக்காயால் அப்படியொரு கெடு பலன் ஏற்பட்டுவிட்டால் அதற்குப் பிணை நிற்கப் போவது யார்? இந்தியாவில் அணு மின் நிலையம் அமைக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள், ஏதேனும் பெரிய அசம்பாவிதம் நேரிட்டால் மிகவும் குறைந்தபட்ச நஷ்ட ஈடு தந்தாலே போதும், வேறு எந்த ஜாமீனும் தேவையில்லை என்று ஒப்பந்தம் தயாரிக்கும் இந்த தேசபக்தர்களை நம்பியா நம் நாட்டு நிலங்களை புதிய மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்க்கு ஒப்படைப்பது?

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆணிவேரையே கெல்லி எறிய தண்டியிலே ஒரு கைப்பிடி உப்பைக் கையில் எடுத்தார் அண்ணல் மகாத்மா காந்தி. நாமெல்லாம் உப்புப் போட்டுத்தான் சாப்பிடுகிறோமா? என் செய்வது, ஐநூறு ரூபாய்க்கும் ஆயிரம் ரூபாய்க்கும் விற்பதற்குத்தான் வோட்டு என்றாகிவிட்ட பிறகு, விலைபேசுவது நம் நாட்டு சரத் பவாராக இருந்தால் என்ன, அமெரிக்க ஆண்டர்சனாக இருந்தால்தான் என்ன?

### தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் குளறுபடி

First Published : 22 Jan 2010 06:43:29 AM IST

தூத்துக்குடி, ஜன. 21: தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வியாழக்கிழமை குற்றம்சாட்டினர்.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆட்சியர் கோ. பிரகாஷ் தலைமை வகித்தார்.

வேளாண்மைத் துறை இணை இயக்குநர் லூயிஸ் ராஜரத்தினம், பொதுப்பணித் துறை தாமிரபரணி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் நாகராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனசிங் டேவிட், வேளாண் அலுவலர் பாலசிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பல விவசாயிகள் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் முறையாக செயல்படுத்தப்படவில்லை என்று குற்றம்சாட்டினர்.

2008-ம் ஆண்டு இந்த திட்டத்தின் கீழ், பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு 2009-ம் ஆண்டில் நஷ்டஈட்டுத் தொகை கிடைக்கவில்லை.

மாவட்ட வேளாண்மை அதிகாரிகளின் மெத்தனப் போக்கு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மற்ற மாவட்டங்களில் இந்த தொகை வழங்கப்பட்ட போதிலும் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் கிடைக்கவில்லை.

மேலும், 2009-ம் ஆண்டில் விவசாயிகள் பிரிமியம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இந்த திட்டமே தூத்துக்குடி மாவட்டத்தில் தோல்வி அடையும் நிலையில் இருப்பதாக விவசாயிகள் கணபதி ராமன், தமிழ்மணி, அழகு உள்ளிட்டோர் குற்றம் சாட்டினர்.

இதற்கு பதிலளித்த மாவட்ட ஆட்சியர் கோ. பிரகாஷ், 2008-ல் பிரிமியம் செலுத்தியவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்காதது தொடர்பாக உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும்.

தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும் என்றார்.

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம், கோவில்பட்டி வட்டங்களில் இந்த ஆண்டு போதுமான மழை பெய்யவில்லை. எனவே, தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கருப்பூர் சித்தவன் உள்ளிட்ட சில விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர், மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்துள்ளது. இதனால், வறட்சி மாவட்டமாக அறிவிப்பதற்கான சாத்தியகூறுகள் இல்லை என்றார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண் விற்பனைக் குழு ஏற்படுத்த வேண்டும் என விவசாயி மாரியப்பன் கோரிக்கை விடுத்தார். இதற்கு ஆதரவாக மேலும் சில விவசாயிகளும் குரல் கொடுத்தனர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர், இது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்றார் அவர்.

விவசாயிகள் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டை கிடைக்கவில்லை என சில விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த ஆட்சியர், மாவட்டத்தில் சுமார் 4.5 லட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கிடைக்காத விவசாயிகளுக்கும் விரைவில் வழங்கப்படும் என்றார்.

**பண்ணைசாரா கடன் பெற்றவர்களுக்கு சலுகை**

First Published : 22 Jan 2010 12:41:10 AM IST

காஞ்சிபுரம், ஜன. 21: கூட்டுறவு சங்கங்களின் பண்ணைசாராக் கடன் பெற்றவர்கள் வரும் ஜனவரி 31-ம் தேதிக்குள் நிலுவைத் தொகையை செலுத்தினால் பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வுதிட்ட சலுகை பெறலாம்.

இது குறித்து காஞ்சிபுரம் மண்டல இணைப் பதிவாளர் கோ.செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நகர வங்கிகள், கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் பண்ணைசாராக் கடன் பலர் பெற்றுள்ளனர்.

அவர்களுக்கு பண்ணைசாரா சிறப்பு கடன் தீர்வு திட்டம் 2009 குறித்து அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. கடன் தொகையில் 25 சதவீதம் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் மற்றும் இத் திட்டத்தின் கீழ் தகுதியானவர்கள் சலுகை பெற, வரும் 31-ம் தேதிக்குள் நிலுவைத் தொகையை செலுத்தி பயன்பெறலாம் என்றார்.

**பயிர்க் காப்பீட்டுத் திட்ட மதிப்பீட்டாய்வு சோதனை அறுவடை: வேளாண் அலுவலர் ஆய்வு**
First Published : 21 Jan 2010 05:54:34 AM IST

நாகப்பட்டினம், ஜன. 20: தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திó்ட்ட பயிர் மதிப்பீட்டாய்வு சோதனை அறுவடை நாகை மாவட்டம், சீர்காழி அருகே உள்ள புதுத்துறையில் வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஆர்.வி. கருணாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக வேளாண் துறை ஆணையர் கோசலராமன் வியாழக்கிழமை நாகை மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், ஆத்மா திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், விதை கிராமத் திட்டம், தென்னை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐசோபாம் திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்கிறார். வியாழக்கிழமை காலை குத்தாலம் ஒன்றியம், கொத்தங்குடி கிராமத்தில் கரும்பு துல்லியப் பண்ணைத் திட்டத்தை ஆய்வு செய்கிறார். இதைத் தொடர்ந்து, செம்பனார்கோவில் அரசூரில் வேளாண் துறை சார்பில் நடைபெறும் உழவர் வயல்வெளிப் பள்ளி வயல் தின விழா, விதை கிராமத் திட்டப் பணியாளர்களுக்கு மானிய விதையில் உளுந்து, பயறு விதைகள் வழங்கும் விழா ஆகியவற்றில் வேளாண் துறை ஆணையர் பங்கேற்கிறார். பிற்பகல் சுமார் 3 மணிக்கு சீர்காழி அருகே உள்ள புதுத்துறையில் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும், பயிர் மதிப்பீட்டாய்வுக்கான சோதனை அறுவடையைப் பார்வையிடுகிறார்.

**பயிர்க் காப்பீட்டுத் திட்ட மதிப்பீட்டாய்வு சோதனை அறுவடை: வேளாண் அலுவலர் ஆய்வு**
First Published : 21 Jan 2010 05:54:34 AM IST

நாகப்பட்டினம், ஜன. 20: தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திó்ட்ட பயிர் மதிப்பீட்டாய்வு சோதனை அறுவடை நாகை மாவட்டம், சீர்காழி அருகே உள்ள புதுத்துறையில் வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஆர்.வி. கருணாகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக வேளாண் துறை ஆணையர் கோசலராமன் வியாழக்கிழமை நாகை மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம், ஆத்மா திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், விதை கிராமத் திட்டம், தென்னை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐசோபாம் திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்கிறார். வியாழக்கிழமை காலை குத்தாலம் ஒன்றியம், கொத்தங்குடி கிராமத்தில் கரும்பு துல்லியப் பண்ணைத் திட்டத்தை ஆய்வு செய்கிறார். இதைத் தொடர்ந்து, செம்பனார்கோவில் அரசூரில் வேளாண் துறை சார்பில் நடைபெறும் உழவர் வயல்வெளிப் பள்ளி வயல் தின விழா, விதை கிராமத் திட்டப் பணியாளர்களுக்கு மானிய விதையில் உளுந்து, பயறு விதைகள் வழங்கும் விழா ஆகியவற்றில் வேளாண் துறை ஆணையர் பங்கேற்கிறார். பிற்பகல் சுமார் 3 மணிக்கு சீர்காழி அருகே உள்ள புதுத்துறையில் தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும், பயிர் மதிப்பீட்டாய்வுக்கான சோதனை அறுவடையைப் பார்வையிடுகிறார்.

**பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வுத் திட்டம்**
First Published : 21 Jan 2010 06:57:49 AM IST

மதுரை, ஜன. 20: அரசு உத்தரவின் பேரில் கூட்டுறவு வங்கிகளில் பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டம் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, நகர் கூட்டுறவு வங்கிகள், கலைக்கப்பட்ட மதுரை நகர கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் வழங்கப்பட்ட பண்ணைசாரா கடன்களுக்கு மட்டும் பொருந்தும்.

கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாள் வரை 6 சதம் சாதாரண வட்டி மட்டுமே கணக்கிடப்படும். கூடுதல் வட்டி, அபராத வட்டி, செலவினங்கள் தள்படி செய்யப்படும். இத்திட்டம் 31.1.2010 }ல் முடிவடைகிறது.

எனவே, இந்த வாய்ப்பை ஏற்கெனவே 25 சதம் தொகை செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்தவர்களும், புதிதாக இத்திட்டத்தில் சேர்வோரும் முழுத்தொகையினை ஜனவரி 31ம் தேதிக்குள் செலுத்தி பயனடையலாம் என, மதுரை மண்டல இணைப் பதிவாளர் கே.வி.எஸ்.குமார் தெரிவித்துள்ளார்.

**வேளாண் பல்கலை. விளையாட்டுப் போட்டி: ரோவர் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடம்**

First Published : 22 Jan 2010 04:51:45 AM IST

பெரம்பலூர், ஜன. 21: வேளாண் பல்கலைக்கழகத்துக்குள்பட்ட கல்லூரிகளுக்கு இடையேயான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில், பெரம்பலூர் ரோவர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடம் பெற்றனர்.

கோவை வேளாண்மைக் கல்லூரியில், வேளாண் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் கடந்த 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெற்றன. இந்தப் போட்டியில் மதுரை, திருச்சி, கோவை, காரைக்கால், பெரம்பலூர் ஆகிய பகுதிகளிலிருந்து 11 வேளாண் கல்லூரிகள் கலந்து கொண்டன.

இதில், பெரம்பலூர் ரோவர் வேளாண்மைக் கல்லூரி சார்பில் பங்கேற்ற பரத்குமார், திவ்யா, வித்யா, அபிராமி ஆகியோர் நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல் மற்றும் கபடி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றனர்.

சிறப்பிடம் பெற்ற மாணவர்களை கல்லூரி முதல்வர் ஜி. ஜேம்ஸ்பிச்சை, உடல்கல்வி இயக்குநர் கு. சேது மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.

இந்தப் போட்டியில் சிறப்பிடம் பெற்றதன் மூலம் மகாராஷ்டிர மாநிலம், மரத்வாடா கல்லூரியில் நடைபெறும் போட்டிக்கு இந்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தினமலர்

## ரேஷன் கார்டுதாரர்களுக்கு கூடுதலாக 10 கிலோ அரிசி : 2 மாதங்களுக்கு வழங்க மத்திய அரசு முடிவு

ஜனவரி 22,2010,00:00 IST



பருப்பு, சர்க்கரை, உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் போன்றவற்றின் விலை குறித்து, மத்திய அரசு கவலை தெரிவித்து உள்ளது. அதனால், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 10 கிலோ அரிசி மற்றும் கோதுமை கூடுதலாக வழங்கப்படும் என, அறிவித்துள்ளது.

பால் உற்பத்தி விலையை அதிகரிக்கவில்லை எனில், வட மாநிலங்களில் பால் தட்டுப்பாடு ஏற்படும் என, மத்திய அமைச்சர் சரத் பவார் கூறியது பெரும் சர்ச்சையை கிளப்பியது. "சரத் பவாரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும்' என, உ.பி., முதல்வர் மாயாவதியும் தெரிவித்தார். அதேபோல, பா.ஜ., மூத்த தலைவர்களும், நிதின் கட்காரி தலைமையில் பிரதமரை சந்தித்து முறையிட்டனர். இரண்டு வாரம் கூட முடியாத நிலையில், விலைவாசி குறித்து ஆராய மத்திய அமைச்சரவைக் கூட்டம், டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்று மீண்டும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பருப்பு, சர்க்கரை, உருளைக் கிழங்கு, வெங்காயம் ஆகிய நான்கு உணவுப் பொருட்களின் விலை குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கூட்டத்தில் எடுக்கப் பட்ட முடிவுகள் விவரம் வருமாறு: விலைவாசி உயர்வை குறைப்பதற்காக, அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாத கோட்டாவாக கூடுதலாக 10 கிலோ அரிசி மற்றும் கோதுமை வழங்கப்படும். தற்போது, தகுதியுடைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும் 35 கிலோ அரிசி மற்றும் கோதுமைக்கு மேலாக இது வழங்கப்படும். இதற்காக மத்திய தொகுப்பில் இருந்து 10.64 லட்சம் டன் அரிசியும், 25.43 லட்சம் டன் கோதுமையும் வழங்கப்படும். இதை மாநில அரசுகள் மார்ச் மாத இறுதிக்குள் எடுத்துக் கொள்ள வேண்டும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது. கூடுதலாக வழங்கப்படும் 10 கிலோ அரிசி மற்றும் கோதுமை, கிலோவுக்கு ரூ.15.37 மற்றும் ரூ.10.80 என்ற விலையில் வழங்கப்படும்.

அந்த்யோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ், கார்டுதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியானது, கிலோ மூன்று ரூபாய் விலையிலும், கோதுமை இரண்டு ரூபாய் விலையிலும் வழங்கப்படுகிறது. ரேஷன் கார்டுதாரர்களுக்கு பொது வினியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமையின் அளவை அதிகரித்ததோடு, சில்லரை சந்தையில் உணவு தானியங்கள் போதிய அளவில் கிடைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. "நபெட்' மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் சம்மேளனம், தங்களின் சில்லரை விற்பனை கடைகள் மூலம், 70 ஆயிரத்து 84 டன் கோதுமை மற்றும் 28 ஆயிரம் டன் அரிசி விற்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

- நமது டில்லி நிருபர் -

**பால் விலை உயருமா? பவார் மறுப்பு**

ஜனவரி 22,2010,00:00 IST



புதுடில்லி : ""பால் விலையை உயர்த்தும் திட்டம் மத்திய அரசுக்கு இல்லை," என, விவசாய அமைச்சர் சரத் பவார் கூறியுள்ளார். டில்லியில் ஊரக மேம்பாடு தொடர்பான மாநாடு நடந்தது. இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக நிருபர்களிடம் பேசிய பவார், இதைத் தெரிவித்தார். அவர் கூறுகையில், ""பால் விலையை உயர்த்தப் போவதாக மீடியாக்கள் தான் செய்தி வெளியிடுகின்றன. மத்திய அரசுக்கு அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை. பால் உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்துள்ளது. இது விவசாய உற்பத்தியை விட அதிகம்," என்றார்.

**சர்க்கரை விலை கிலோ ரூ.3 குறைவு: அரிசி விற்பனை திடீரென 'டல்'**

சென்னை: மத்திய அரசின் நடவடிக்கையால் சர்க்கரை ஒரே வாரத்தில் கிலோ ஒன்றிற்கு மூன்று ரூபாய் குறைந் துள்ளது. மேலும், குறைய வாய்ப் புள்ளதாக வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. புது அரிசி விலை குறைந்ததற்கு அரிசி விற்பனை டல் என்று கூறப்படுகிறது.

கடந்தமாதம் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை சர்க்கரை 3,800 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ 40, 41 ரூபாய்க்கு விற்கப்பட்ட நிலையில், கடந்த 8ம் தேதி மீண்டும் சர்க்கரை விலை மூட்டைக்கு 200 ரூபாய் உயர்ந்து வரலாறு காணாத வகையில், 4,000 ரூபாயை எட்டியது. தொடர்ந்து, இருதினங்களில் மீண்டும் மூட்டைக்கு 100 ரூபாய் உயர்ந்து 4,100 ரூபாய்க்கு விற்கப் பட்டது.

மத்திய அமைச்சர் சரத்பவார் சமீபத்தில் சர்க்கரை விலை விரைவில் குறைய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தார். இந்நிலையில், தற்போது சர்க்கரை விலை சரியத்துவங்கியுள்ளது. நேற்று முன்தினம் நிலவரப்படி 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை சர்க்கரை 3,880 ரூபாய்க்கும், ஒரு கிலோ 40, 41 ரூபாய்க்கும் விற்கப் பட்டது. சர்க்கரை விலையை தொடர்ந்து வெல்லத்தின் விலையும் சற்று குறைந்துள்ளது. சேலம் வெல்லம் 40லிருந்து 35 ரூபாயாகவும், வேலூர் வெல்லம் 45 லிருந்து 40 ரூபாயாகவும், அச்சு வெல்லம் 50 லிருந்து 45 ரூபாயாகவும் குறைந்துள்ளது. மேலும் தற்போது பருப்பு வகைகளின் விலையும் சரிவை சந்தித்துள்ளது. துவரம்பருப்பு விலை முதல்ரகம் ஒரு கிலோ 85 லிருந்து 76 ரூபாயாகவும், நாட்டு துவரம்பருப்பு 77லிருந்து 70 ரூபாயாகவும், பர்மா ரகம் 66லிருந்து 60 ரூபாயாகவும், டர்கி 52 லிருந்து 46 ரூபாயாகவும் குறைந் துள்ளது. உளுந்து விலை முதல் ரகம் 74 லிருந்து 70 ரூபாயாகவும், இரண்டாம் ரகம் 70 லிருந்து 66 ரூபாயாகவும் குறைந்துள்ளது. பொங்கலை ஒட்டி விலை உயர்வை சந்தித்த பாசிப்பருப்பு ஒரு கிலோ 85 லிருந்து 80 ரூபாயாகவும், இரண்டாம் ரகம் 80 லிருந்து 76 ரூபாயாகவும் விலை குறைந் துள்ளது. தற்போது, பருப்பு விளைச்சல் அதிகமாக உள்ளதால் மேலும் விலை குறைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

அரிசி வகைகளை பொறுத்தவரையில், புதிய அரிசியின் விலை மூட்டைக்கு 200 முதல் 300 ரூபாய் வரையில் குறைந்துள்ளது. பழைய அரிசி விலை அப்படியே நிலை கொண்டுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு அனைத்து மளிகைப்பொருள் வியாபாரிகள் சங்க தலைவர் சொரூபன் கூறுகையில், ""மத்திய அரசின் நடவடிக்கையால் சர்க்கரை மற்றும் பருப்பின் விலை குறைந்து வருகிறது. ""மேலும், பூண்டு உள்ளிட்ட பொருட்களின் விலையும் குறைந் துள்ளது. இருந்தாலும், வியாபாரம் டல்லாக இருப்பதாக தகவல்கள் வருகின்றன. அரிசி விலை குறைந்தாலும் மக்கள் அரிசி பயன்பாட்டை குறைத் துள்ளதால் அரிசி விற்பனையும் மந்தம்தான்," என்றார்.

**பயறு போடுங்க; வருமானம் கூடும் விவசாயிகளுக்கு அறிவுரை**

அன்னூர் : ""பயறு வகை பயிரிட்டால் நல்ல வருமானம் பெறலாம்," என, வேளாண் இணை இயக்குனர் கந்தசாமி தெரிவித்தார். அரசு மானியம் விவசாயிகளுக்கு சரியாக வழங்கப்படுகிறதா, மேம்பாட்டு பணிகள் நடக்கிறதா, என தேசிய அளவிலான உணவு பாதுகாப்பு திட்ட குழு ஆய்வு செய்து வருகிறது. இக்குழு அன்னூர், கோவில்பாளையம் மற்றும் அவிநாசி வட்டாரங்களில் ஆய்வு நடத்தியது. அன்னூர் அருகே ஓரைக்கால்பாளையத்தில் ஒரு தோட்டத்தில் துவரை விதை பண்�ணையை ஆய்வு செய்தனர்.

அங்கு செயல்படும் வேளாண் மகளிர் குழு (டான்வெப்) உறுப்பினர்களிடம் குழு செயல்பாடுகள் குறித்தும், அல்லப்பாளையத்தில் மானிய விலையில் வழங்கப்பட்ட மின்மோட்டார் குறித்தும் ஆய்வு செய்தனர். மானிய விலை இடுபொருட்கள் சரியாக வழங்கப்படுகிறதா என்று விவசாயிகளிடம் கேட்டு விபரம் பெற்றனர். குழுவில் சென்னை, துணை இயக்குனர் (பயறு) மோகன் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் இடம் பெற்றிருந்தனர்.

உடன் வந்த வேளாண் இணை இயக்குனர் கந்தசாமி கூறியதாவது: தமிழகத்தில் ஏழு லட்சம் ஹெக்டேரில் பயறு வகை சாகுபடி செய்யப்படுகிறது. சராசரியாக 32 லட்சம் டன் பயறு உற்பத்தியாகிறது. இது தமிழகத்தின் தேவையில் 25 சதவீதம் மட்டுமே. மீதி தேவைக்கு மற்ற மாநிலங்களை நம்பி உள்ளோம். பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க மானிய விலையில் இடுபொருள் வழங்கப்படுகிறது. ஸ்பிரேயர், ஸ்பிரிங்ளர், தார்பாய் ஆகியவையும் மானியத்தில் தரப்படுகிறது.

மானாவாரியில் துவரை, பச்சைபயறு, உளுந்து ஆகியவை ஒரு ஹெக்டேருக்கு 450 கிலோ மகசூல் கிடைக்கிறது. தற்போது பயறு வகைகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. விவசாயிகள் பயறு வகைகளை பயிரிட்டால் நல்ல வருமானம் பெறலாம். இவ்வாறு, கந்தசாமி தெரிவித்தார். ஆய்வுக் குழுவுடன், வேளாண் துணை இயக்குனர் நடராஜன், உதவி இயக்குனர் விஜயகுமார், வேளாண் அலுவலர் சீனிராஜ் ஆகியோர் வந்திருந்தனர்.

**'பால் பண்ணை துவங்க முன் அனுபவம் தேவை'**

பெ.நா.பாளையம் : "பால் பண்ணை துவங்க, விவசாயிகளுக்கு முன் அனுபவம் தேவை' என, பால் பண்ணை தொழில் நுட்ப கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. தோட்டக்கலை மற்றும் பால் பண்ணை தொழில்நுட்ப கருத்தரங்கு, ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவனம், தேசிய வேளாண் ஊரக மேம்பாட்டு வங்கி சார்பில் நடந்தது.

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு நிறுவன முதல்வர் சங்கரலிங்கம் பேசியதாவது: கால்நடை வளர்ப்பு, விவசாயத்தின் ஒருங்கிணைந்த அங்கம். பருவ நிலை மாற்றத்தால் விவசாயம் பொய்த்து போனாலும், வருமானம் அளிப்பது கால்நடை வளர்ப்பு தான். சிறிய, நடுத்தர அளவிலான பால் பண்ணை மற்றும் கலப்பின பண்ணைகளை பராமரிப்பதால் கால்நடைகள் மூலமாக வருமானம் கிடைக்கிறது. குஜராத், பஞ்சாப், மகராஷ்டிராவிலுள்ள சிந்தி, ராதி, சாஹிவால், கிர், தியோனி, தார் பார்க்கர், கிலாரி ஆகிய

மாட்டு இனங்களும், முர்ரா, சூர்தி, ஜரபாடி, நீலிராவி, மெஹ்சானா, நாக்பூரி, பந்தர்புரி போன்ற எருமை இனங்களும் பால் உற்பத்திக்கு உகந்தவை.

தென் மாநில மாடுகளுடன் அயல் இன மாடுகளை கொண்டு இனப்பெருக்கம் செய்து ஓரளவு பால் உற்பத்தியை பெருக்க முடியும். கலப்பின பசுக்களே, பால் பண்ணைக்கு ஏற்றவை. கறவை மாடுகளை தேர்வு செய்யும் முன் தேவையான புல்வகை தீவனங்களை உற்பத்தி செய்ய வேண்டும். கறவை மாடு வாங்குவதாக இருந்தால் மூன்று வேளையும் கறந்து பால் அளவை நிர்ணயித்து பிறகே வாங்க வேண்டும். கன்று ஈன்ற ஒரு வாரத்தில் வாங்குவது நல்லது. கன்று ஈன்ற மாடுகள் அதிக பட்ச பால் அளிக்கும் திறனை 20 நாட்களில் அடைந்து விடும். பால் பண்ணை ஆரம்பிக்கும் முன் விவசாயிகளுக்கு, அனுபவம் தேவை. இவ்வாறு, சங்கரலிங்கம் பேசினார். கருத்தரங்கில், ராமகிருஷ்ண வித்யாலய வேளாண், ஊரக மேம்பாட்டு நிறுவன செயலர் சுவாமி தத்பிரபானந்தர், தமிழ்நாடு வேளாண் பல்கலை தொலை தூர கல்வி இயக்குனர் வள்ளுவ பாரிதாசன், கோவை "நபார்டு' வங்கி உதவி பொது மேலாளர் சுரேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**உழவர் தின விழா**

ஊத்தங்கரை: ஊத்தங்கரை பாரத ஸ்டேட் பாங்க்கில் உழவர் தினவிழா நடந்தது. கிளை மேனேஜர் நவீந்திரன் தலைமை வகித்து, உழவர்களுக்கு இனிப்புகளை வழங்கினார். வங்கி ஊழியர்கள் அன்பழகன், புகழேந்தி, வெங்கடேசன், சதீஸ்குமார், சபரி, செல்வம், பெருமாள், மணிவண்ணன், தமிழரசன், சுபாஷ்சந்திரபோஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஒரு வாரம் நடந்த விழாவில் விவசாயிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஏரியில் மீன் வளர்ப்பதற்காக ஒரு லட்சம் மீன் குஞ்சுகள்**

கொடைக்கானல் : கொடைக்கானல் ஏரியில் மீன் வளர்ப்பிற் காக, அத்துறை சார்பில் ஒரு லட்சம் மீன்குஞ்சுகள், இருப்பு வைக்கப்பட்டுள் ளது.
கொடைக்கானல் ஏரியில் மீன்வளத்துறை சார்பில் சாதாகெண்டை, புல்கெண்டை மீன்கள் வளர்க்கப்படுகிறது. இம்மீன்களை பிடிப்பதற்கு வருடாந்திர லைசென்ஸ், சீசன் மாதங்களில் உரிமம் வழங்கப்படும்.இருப்பினும் ஒவ்வொரு ஆண்டும் மீன் வளத்துறையினரால் ஜனவரி மாதத்தில் மீன் குஞ்சுகள் ஏரியில் விடம். அதன் படி இந்தாண்டு சாதாகெண்டை(கோல்டன் கார்ப்) ஒருலட்ச குஞ்சுமீன்கள் வரும். 25ம்தேதி விடப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கால்நடை பாதுகாப்பு முகாம்**

திண்டுக்கல் : ஏ.வெள்ளோடு ஊராட்சி நரசிங்கபுரத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் முத்தழகுபட்டி கால்நடை உதவி மருத்துவர் ஜெ.ராஜேஷ்குமார் தலைமையில் நடந் தது. கால்நடை ஆய்வா ளர்கள் எஸ். பூசாரி, எம். பாலச்சந்திரன், கால்நடை உதவியாளர்கள் ப.ஆறுமுகம், எஸ்.குருசாமி, ஆர். சேகர் அடங்கி குழுவினர் சிகிச்சை அளித்தனர்.
முகாமில் 345 கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் தடுப்பூசி பணி செய்யப் பட்டது. 172 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் தடுப்பூசி போடப்பட்டது. ஆயிரத்து 800 செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்க தலைவர் என்.ராமகிருஷ்ணன் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

வாலாஜாபாத்: மகளிர் சுய உதவிக்குழு கட்டடத்தில் நடந்த முகாமிற்கு ஊராட்சித் தலைவர் லோகநாதன் தலைமை தாங்கினார். கால்நடை உதவி இயக்குனர் அண்ணாமலை முன்னிலை வகித்தார். முகாமில், 200 கோழிகளுக்கு

கழிச்சல் நோய் தடுப்பூசி போடப்பட்டது. 285 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், 675 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், சினைப் பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல் உட்பட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. கால்நடை மருத்துவர் பரணிலட்சுமி, கால்நடை உதவி ஆய்வாளர் பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாகை மாவட்டத்தில் சராசரி 6.6 டன் நெல் மகசூல்:வேளாண் இணை இயக்குனர் தகவல்**

சீர்காழி:நாகை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் இதுவரை 6.6 டன் நெல் மகசூல் கிடைத்துள்ளது என்று மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் சீர்காழி அருகே புதுத்துறை கிராமத்தில் செல்வராஜ் என்பவரது வயலில் நெல் அறுவடை பரிசோதனை நடந்தது. புதுத்துறை ஊராட்சித் தலைவர் தேவேந்திரன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் கருணாகரன், உதவி இயக்குனர்கள் மணிவண்ணன், சம்பத்குமார், கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்துறை ஆணையர் கோசலராமன் நெல் அறுவடை பரிசோதனையை பார்வையிட்டார்.

இதில் சுமார் 25 சதுர மீட்டரில் நெல் அறுவடை செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டது.பின்னர் வேளாண் இணை இயக்குனர் கருணாகரன் நிருபர்களிடம் கூறியது:நாகை மாவட்டத்தில் 1 லட்சத்து 33 ஆயிரம் எக்டேரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டது. தற்போது மாவட்டத்தில் பரவலாக சம்பா அறுவடைப்பணி நடந்து வருகிறது. இதுவரை மாவட்டத்தில் சராசரியாக 6.6 டன் மகசூல் கிடைத்துள்ளது. இன்னும் நெல் அறுவடை பரிசோதனை நடத்தப்பட உள்ளது. அறுவடை முழுமையாக முடிந்த பிறகு மொத்த சராசரி மகசூல் கணக்கிடப்படும்.

புதுத்துறை கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட அறுவடை பரிசோதனையில் 13.870 கிலோ கிடைத்துள்ளது. இது 5.548 டன் ஆகும். மேலும் மாவட்டத்தில் உளுந்து மகசூலை அதிகரிக்கும் நோக்கத்துடன் பூச்சி மருந்துகள் தெளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.வேளாண் உதவி இயக்குனர் ராஜேந்திரன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் வீரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**ஜன.,29ல் வில்லிபாளையத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாமக்கல்: "ப.வேலூர் தாலுகா வில்லிபாளையம் கிராமத்தில் ஜனவரி 29ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது' என, மாவட்ட கலெக்டர் சகாயம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வேளாண் உற்பத்திக் குழு கூட்டம் வரும் 29ம் தேதி பவேலூர் தாலுகா வில்லிபாளையம் கிராமத்தில் நடக்க உள்ளது. கூட்டத்தில் பங்கேற்க வரும் விவசாயிகளை, கூட்டம் நடக்கும் இடத்துக்கு அழைத்து வர பரமத்தி யூனியன் அலுவலகம், கந்தம்பாளையம் பஸ் நிலையத்திலும் வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரூ.25 லட்சத்தில் தடுப்பணை, குட்டைகள்: வடக்கு வனக்கோட்டத்தில் 'ஜரூர்'**

ஊட்டி : நீலகிரி வடக்கு வனக்கோட்டம் சிங்காரா மற்றும் சீகூர் வனச்சரகங்களில், ரூ.25 லட்சம் மதிப்பில், எட்டு தடுப்பணைகள் மற்றும் மூன்று கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.நீலகிரியில் பனிகாலம் முடிந்து கோடைகாலம் துவங்க உள்ளதால், வனங்களில் பசுமை குறைந்து வறட்சி ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது; நீர் மற்றும் உணவு தேடி, விலங்குகள் வேறு பகுதிகளுக்கு இடம் பெயரும். நீலகிரி வடக்கு வனக்கோட்டத்துக்கு உட்பட்ட சீகூர் மற்றும் சிங்காரா வனப்பகுதிகளில் வறட்சி தலைகாட்டுவதால், இப்பகுதியில் உள்ள விலங்குகள் சத்யமங்கலம் வனப்பகுதிக்கும், முதுமலை வழியாக பந்திப்பூர் வனச்சரணாலயத்துக்கும் இடம் பெயரும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. வறட்சியை சமாளிக்க, வனத்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சீகூர் வனச்சரகத்தில் 3 லட்சம் மதிப்பில் ஒரு கசிவு நீர் குட்டை, சீகூர், சிங்காரா மற்றும் வட கிழக்கு சரகங்களில் தலா 2.5 லட்சம் மதிப்பில் 3 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும்,

12வது நிதிக்குழு நிதியில் சீகூர் சரத்தில், 2.5 லட்சம் மதிப்பில் ஒரு தடுப்பணை, 1.5 லட்சம் மதிப்பில் சிங்காரா மற்றும் சீகூர் சரகங்களில் தலா இரு தடுப்பணைகள், சீகூர் வனச்சரகத்தில் 3 லட்சம் மதிப்பில் இரண்டு கசிவு நீர் குட்டைகள் என, வடக்கு வனக்கோட்டத்தில், 25 லட்சம் மதிப்பில் மேம்பாட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.கோடை காலத்தில் வனங்களில் நீர்வரத்து குறையும் நிலையில், விலங்குகளின் தாகம் தீர்க்க குட்டைகள் மற்றும் நீர்நிலைகளில் வனத்துறை சார்பில் தண்ணீர் நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது; வனப்பகுதிகளில் தீ பரவாமல் இருக்க, வடக்கு வனக்கோட்டத்தில் 200 கி.மீ., தூரம் தீத்தடுப்பு கோடு வெட்டப்பட்டுள்ளது; பணிகளில், தீ தடுப்பு காவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என, வடக்கு வனக்கோட்ட வன அலுவலர் சவுந்தரபாண்டியன் தெரிவித்தார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.1,500 வழங்கப்படும் சர்க்கரை ஆலை திறப்பு விழாவில் நிறுவனர் சீனிவாசன் அறிவிப்பு**

பெரம்பலூர்: கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படும், " என தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலை திறப்பு விழாவில் தனலட்சுமி சீனிவாசன் குழுமங்களின் தலைவர் மற்றும் நிறுவனர் சீனிவாசன் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா உடும்பியம் கிராமத்தில் 150 ஏக்கரில் நானூறு கோடி ரூபாயில் கட்டப்பட்ட தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலையின் திறப்பு விழா நேற்று நடந்தது. விழாவில் தனலட்சுமி சீனிவாசன் குழுமங்களின் தலைவர் மற்றும் நிறுவனர் சீனிவாசன் தலைமை வகித்து பேசியதாவது:

இந்த இனிய வேளையில் கரும்பு விவசாயிகளுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தியை இந்த மேடையிலேயே அறிவிக்க ஆசைப்படுகிறேன். கடந்த வாரம் பெரம்பலூரில் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் கரும்பு விவசாயிகளின் கஷ்டங்களை கலந்து பேசிய பொழுது விவசாயிகள் கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரத்து 750 ரூபாய் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

அந்தக் கோரிக்கையை ஏற்று 2009-2010ம் ஆண்டு கரும்பு அரவை சீசனுக்கு அரசு நிர்ணயித்த விலையின்படி ஆயிரத்து 505 ரூபாயும், ஆலை சார்பில் ஊக்கத்தொகையாக 245 ரூபாயும்சேர்த்து ஒருடன் கரும்புக்கு ஆயிரத்து 750 ரூபாய்வழங்க தீர்மானித்துள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். வாகன வாடகையை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும். ஆகவே, கரும்பு விவசாயிகள் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பயனடைய வேண்டும்.

ஆலையை குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி துவங்க உறுதுணையாக இருந்த ஆலையின் செயல் இயக்குநர் சீனிவாசனுக்கு பத்து பவுன் செயினும், மூன்று லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான செக்கும், கோஜென் மேனேஜர் ஜெயக்குமாருக்கு ஐந்து பவுன் செயினும், ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான செக்கும், மில் மேனேஜர் பழனிவேல்ராஜனுக்கு ஐந்து பவுன் செயினும், ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான செக்கும், எலக்ட்ரிக்கல் மேனேஜர் சரவணனுக்கு ஐந்து பவுன் செயினும், ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கான செக்கும், சி.சி.சி., எல்லின் மேலாளர் அறிவழகனுக்கு ஐந்து பவுன் செயினும், ராஜன் என்பருக்கு 55 ஆயிரம் ரூபாய்க்கான செக்கும் மற்றும் ஆலையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு மாத சம்பளம் போனஸாகவும் வழங்கப்படும். இவ்வாறு சீனிவாசன் பேசினார். ஆலை செயல் இயக்குநர் சீனிவாசன் நன்றி கூறினார்.

**வேளாண் விற்பனைக்குழு தலைவர் உழவர் சந்தையில் திடீர் ஆய்வு**

மன்னார்குடி: மன்னார்குடி பஸ் ஸ்டாண்ட் அருகே செயல்படும் உழவர் சந்தையை திருவாரூர் மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் தெட்சிணாமூர்த்தி திடீர் ஆய்வு மேற்கொண்டார். விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். ""உழவர் சந்தையில் மேற்கூரை இல்லை. இதனால், மழை, வெயில் காலங்களில் விவசாயிகளும், காய்கறிகளும் பாதிக்கப்படுகிறது. எடைத்தராசு பற்றாக்குறையாக உள்ளது. உழவர் சந்தைக்கான கழிப்பறை

வசதியாக தனியாக கட்டித்தர வேண்டும்," என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் முத்துவேல், ஒன்றிய செயலாளர் தலையாமங்கலம் பாலு, நகராட்சி தலைவர் கார்த்திகா உத்தமன், வேளாண் உதவி இயக்குனர் தர்மராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பரண்மேல் ஆடு வளர்க்கும் முறையில் அதிக லாபம்:நீடாமங்கலம் அறிவியல் நிலைய தலைவர் தகவல்**

நீடாமங்கலம்:பரண் மேல் ஆடு வளர்க்கும் முறையால் அதிக லாபம் பெறலாம் என்று நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:திருவாரூர் மாவட்டத்தில் பெரும்பாலான பரப்பளவில் நெல் மற்றும் நெல் சார்ந்த பயிர்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நெல் சார்ந்த பயிர் சாகுபடியில் அதிகளவு வருமானம் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை.

இதனால் விவசாயிகள் நிரந்தரமாக வருமானம் பெறும் வகையில் நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையம் புறக்கடை கோழி வளர்ப்பு, பரண்மேல் ஆடு வளர்ப்பு, உள்நாட்டு கூட்டு மீன்கள் வளர்ப்பு, மரம் வளர்ப்பு போன்ற மாற்று பண்ணையங்களில் விவசாயிகளை ஈடுபடுத்தி வருகிறது.நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பரண்மேல் ஆடு வளர்ப்பு மாதிரி அமைக்கப்பட்டுள்ளது. இதை விவசாயிகள் நேரில் பார்க்கலாம். இந்த வளர்ப்பு முறையில் ஆடுகளின் கழிவுகள் பரணுக்கு கீழ் விழுந்து விடுவதால் பரண்மேல் வளரும் ஆடுகளை சுகாதார முறையில் வளர்க்கலாம். ஆடுகளை வெளியில் கொண்டு போய் மேய்ப்பதால் ஆடுகளின் எடை அதிகளவில் கூடுவதற்கு வாய்ப்பு இல்லை.மேலும் 10 ஆடுகளை மேய்க்க மற்றும் பராமரிக்க நாள் முழுவதும் ஒரு ஆள் தேவைப்படுகிறது.

ஆனால் பரண்மேல் வளர்க்கும் ஆடுகள் வெளியில் விடாமல் குறிப்பிட்ட இடத்திற்குள் வளர்க்கப்படும் போது ஒரே மாதத்தில் 2 முதல் 3 கிலோ வரை விரைவாக எடை கூடுகிறது. மேலும் ஒரு ஆள் ஒரு சில மணி நேரம் செலவு செய்தால் போதுமானது. ஒரு ஆட்டுக்கு 10 சதுர அடி கணக்கில் பரண் அமைத்து தலைச்சேரி, போயர் போன்ற உயர் வகை ஆடுகளை வளர்த்து அதிக லாபம் ஈட்டலாம். இது தொடர்பாக வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.மேலும் விவரங்களுக்கு வேளாண் அறிவியல் நிலையத்தை நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண்-04367–260666, 261444ல் தொடர்பு கொள்ளலாம்.

**பருத்தி விவசாயிகளுக்கு விவசாயத்துறை ஆலோசனை**

பெரியகுளம் : பருத்தியில் நுனிக்குருத்துபுழுவை கட்டுப்படுத்த ஆமணக்கு பயிரிடவேண்டும் என விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

பெரியகுளம் பகுதி எருமலைநாயக்கன்பட்டி உட்பட பல்வேறு கிராமப்பகுதிகளில் அதிகளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருத்தியில் நுனிக்குருத்துப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளது. புழுதாக்கப்பட்ட செடியின் இலைகள், பூக்கள், சப்பைகள் காய்ந்து விடுகின்றன. இதனால் மகசூல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பருத்தி செடியில் ஏற்படும் பாதிப்பை தவிர்க்க வழிமுறைகள் குறித்து விவசாயத்துறை உதவி இயக்குனர் பெரியசாமி கூறுகையில், கோடை உழவு செய்தல், மண் ஆய்வுப்படி உரமிடுதல், இயற்கை உரங்களை இடுதல், தரமான விதைகளை பயன்படுத்துதல், பருத்தியை சுற்றி ஆமணக்கு பயிரிடுதல் ஆகியவற்றை செய்து, வயல், வரப்புகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

முட்டைப்புழு, கூட்டுப்புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி வைத்து தத்துப்பூச்சி, அந்துப்பூச்சிகளை அழித்தல், குளோர்பைரிபாசை ஒரு லிட்டர் நீரில் இரண்டு மில்லி கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் செடி முழுவதும் நனையுமபடி தெளித்து கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

**அரசின் பயிர் காப்பீடு; உயிர் காப்பீடு வனத்துறை அமைச்சர் பெருமிதம்**

முசிறி: ""பயிர் காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல்வர் உயிர் காப்பீட்டு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார்," என்று அமைச்சர் செல்வராஜ் பேசினார்.முசிறி யூனியன், நெய்வேலி பஞ்சாயத்தில் பொங்கல் விழாவை முன்னிட்டு நடந்த விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடந்தது. விழாவிற்கு பஞ்சாயத்து தலைவர் சேவுகமூர்த்தி வரவேற்றார்.

தி.மு.க., ஒன்றிய செயலாளர் சோழன், யூனியன் கவுன்சிலர்கள் சின்னசாமி, மலர்கொடி, யூனியன் துணை தலைவர் ரமேஷ்குமார், மாவட்ட கவுன்சிலர் ராமலிங்கம், அவைத்தலைவர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வனத்துறை அமைச்சர் சல்வராஜ் தலைமை வகித்து விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கி பேசியதாவது: பொங்கல் விழா கால்நடைகளுக்கு நன்றி சொல்லும் விழாவாகும். 1921ல் தமிழ் அறிஞர்கள் தை திங்கள் முதல் நாளை தமிழ் புத்தாண்டாக அறிவிக்க கோரி தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர். அதன் அடிப்படையில் 1924ல் பிறந்த தமிழக முதல் அமைச்சர் அதை நிறைவேற்றி உள்ளார்.

எதிர்காலத்தில் மாணவ, மாணவிகள் அனைத்து துறைகளிலும் வெற்றி பெற வேண்டும் �ன்று எண்ணத்தில் அவர்களுக்கு தன்னம்பிக்கை உருவாக்கும் நோக்கத்துடன் மன தைரியத்தை அளிக்கும் வகையில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தி.மு.க.,வின் தேர்தல் அறிக்கையல் குறிப்பிட்டவாறு, 23 லட்சம் விவசாயிகளுக்கு ஏழாயிரம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்து விவசாயிகளின் வாழ்க்கையில் முதல்வர் ஒளி ஏற்றி உள்ளார். இதுவரை கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஒன்றரை கோடி பேர் ஃபோட்டோ எடுத்துள்ளனர். பயிர் காப்பீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல்வர் உயிர் காப்பீட்டு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் செல்வராஜ் பேசினார். முன்னதாக நெய்வேலியை சேர்ந்த அ.தி.மு.க., கிளை செயலாளர் தங்கையா, வெள்ளப்பாறை கிராம கிளை பிரதிநிதி செல்வம் ஆகியோர் தலைமையில் 38 பேர் அ.தி.மு.க.,வில் இருந்து விலகி தி.மு.க.,வில் இணைந்தனர். விழாவில், திருத்தியமலை பஞ்சாயத்து தலைவர் கலைச்செல்வி, ஒப்பந்தக்காரர்கள் சின்னதுரை, சுந்தரம், பாலசுப்பிரமணியன், நெய்வேலி பஞ்சாயத்து துணை தலைவர் மாசிலாமணி, நூலகர் பெரியசாமி, மக்கள் நல பணியாளர் கருணாநிதி, பிரமுகர்கள் நேசமணி, பெரியசாமி, செல்வம் உட்பட பலர் திரளாக பங்கேற்றனர்.கிளை செயலாளர் முடியரசன் நன்றி கூறினார்.

**கன்று ஈனும் கால்நடை பராமரிக்க 'அட்வைஸ்'**

அரவக்குறிச்சி: "கன்று பிறக்கும் காலத்தில் கடைபிடிக்கப்படும் சரியான உணவு முறையா கால்நடைகளை காப்பாற்ற முடியும்' என்று ஆண்டிப்பட்டிகோட்டை கால்நடை மருத்துவமனை டாக்டர் விஜயகுமார் அறிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கால்நடை கன்று ஈனும் காலத்தில் கடைபிடிக்கப்படும் முறையான உணவு முறையில் கால்நடை உணவுக்கு பிறகு அசைபோடும் இயல்பு உள்ளவை. புல் சம்பந்தப்பட்ட சோளதட்டு, வைக்கோல் உள்ளிட்ட நார் சத்து பொருள் அசைபோடுவதற்கு உதவும். அரிசி, சோளம், கம்பு உள்ளிட்ட மாவு சத்து பொருட்களை அதிகமாக சாப்பிடும் கால்நடை வயிற்றில் "லேக்டிக் அமில கரைசல்' உருவாகி குடல் அரிப்பு, வலி, ரத்த அமிலத்தன்மை, சிறுநீர் பாதை எரிச்சல் உள்ளிட்டவை ஏற்படும். கால்நடை இறக்கும் நிலையும் ஏற்படும்.

இவை தவிர்த்து தானியம், மாவுவகை, கூழ்வகை அளவோடு கொடுக்க வேண்டும். பழைய சாதம் கால்நடைகளுக்கு வழங்குவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். கால்நடைக்கு ஏதேனும் பாதிப்பு அறிகுறி தெரிந்தால் உடனுக்குடன் தண்ணீரில் சமையல் சோடாவை கரைத்து கொடுக்க வேண்டும். அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டால் மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும். கன்று ஈனும் காலத்தில் முதல் மூன்று நாள் பசுந்தீவனம், தவிடு இவை போதுமான

உணவுமுறை. தொடர்ந்து சோளம், கம்பு என படிப்படியாக கூடுதலாக ஊட்டசத்துள்ள உணவு கொடுக்கலாம். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**விதை கிராம பயிற்சி முகாம்**

தென்காசி: கடையநல்லூர் பகுதியில் விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது.

கடையநல்லூர் வட்டாரம் வேலாயுதபுரம், புன்னையாபுரம் பகுதியில் விதை கிராம பயிற்சி (பயறு) முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் உமர்கத்தா பேசும் போது, விதை கிராமத்தின் அவசியம் குறித்தும், விவசாயிகளே தரமான விதைகளை உற்பத்தி செய்வது குறித்தும் விளக்கினார். வேளாண்மை அலுவலர் முருகையா பேசும் போது, "அதிக மகசூல் பெற சான்று பெற்ற விதைகளை விதைக்க வேண்டும். 2 சதம் டி.ஏ.பி.கரைசல் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்' என்றார்.

நெல்லை விதை சான்று உதவி இயக்குநர் பிரம்மநாயகம், சங்கரன்கோவில் விதை சான்று அலுவலர் நல்லமுத்துராஜா தரமான பயறு விதை உற்பத்தி செய்வது குறித்து விளக்கம் அளித்தனர். விதை பண்ணை அமைத்தல், பயிர் விலகு தூரம், முதல் வயல் ஆய்வு நாட்கள், கலவன் அகற்றுதல், பூஞ்சாணம் தாக்கிய செடிகளை அகற்றி நெருப்பிட்டு கொளுத்துதல், 2 சதம் டி.ஏ.பி.கரைசல் தெளித்தல், அறுவடை தொழில் நுட்பம், தனி களம் வைத்து அடித்தல், கல் மண் தூசி நீக்குதல், விதையின் ஈரம் உலர்த்துதல் மற்றும் சேமித்தல் குறித்து விளக்கப்பட்டது. புளியங்குடி, ஆய்க்குடியில் உள்ள தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு தரமான விதை உற்பத்தி குறித்து செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**திருவண்ணாமலையில் மீன் குஞ்சு பண்ணை அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு 50 சதவீதம் மானியம்:கலெக்டர்**

திருவண்ணாமலை:திருவண்ணாமலையில் மீன் குஞ்சு பண்ணை அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக கலெக்டர் ராஜேந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:தமிழக அரசு மீன் வளத்துறையின் மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்பில் ஆர்வம் உள்ள தகுதி வாய்ந்தவர்களுக்கு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைப்பதற்கு 50 சதவீதம் மானியம் 2009-10ம் ஆண்டிற்கு வழங்கப்படவுள்ளது.

2009ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு பின்னர் அமைக்கப்பட்டுள்ள மீன் பண்ணைகளுக்கு மட்டுமே மானியம் வழங்கப்படும். ஆண்டிற்கு 5 லட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய தேவையான ஒரு ஹெக்டேர் இடவசதியும் போதுமான தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி உள்ளவர்கள் மட்டுமே தகுதியானவர்களாக தேர்வு செய்யப்படுவார்கள்.இந்த திட்டத்தில் மீன் குஞ்சுகள் பண்ணை அமைக்க 3 லட்சம் ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். அவற்றில் ஒன்றரை லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும். மேற்படி குளம் அமைக்க தேவையான அளவு 4 அடி ஆழத்தில் 10க்கு 20 மீட்டர் அளவில் 6 குளமும், 20க்கு 13 மீட்டர் அளவில் 3 குளமும், 30க்கு 40 மீட்டர் அளவில் ஒரு குளமும் அமைக்க வேண்டும்.

இவற்றில் 3 மாதங்கள் மீன் குஞ்சுகளை வளர்க்க வேண்டும். வளர்ந்தவைகளை விற்பனை செய்யும் போது குறைந்தபட்சம் 2 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும்.தி.மலை மாவட்டத்தை சேர்ந்த மீன் குஞ்சு பண்ணைகள் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் மீன் வளர்ப்பு துறை உதவி இயக்குனர் (உள்நாட்டு மீன்வளம்) வேலூர் கோட்டை, வேலூர் என்ற முகவரியில் அலுவலக நாட்களில் தொடர்பு கொண்டு தேவையான விவரங்களை பெற்று உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சமர்பிக்கலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விதை கிராம திட்ட பயிற்சி**

திருவண்ணாமலை:திருவண்ணாமலை வட்டாரங்களில் விதை கிராம திட்ட பயிற்சி நடந் தது.தி.மலை வட்டாரத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் சு.பள்ளியம்பட்டு, காவேரியாம்பூண்டி ஆகிய கிராமங்களில் முறையே சிறுதான்யம் பயறுவகை பயிர்களில் தரமான விதை உற்பத்திக்கு வளர்ச்சி பருவத்தில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் விதைச்சான்று நடைமுறைகள் பற்றி உரிய தொழில் நுட்ப வல்லுனர்களால் விளக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் கோமதிநாயகம், விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்பிரமணி மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் பாலா ஆகியோர் பேசினர். வேளாண்மை அலுவலர் கள் குணசேகரன், கண் ணகி, மற்றும் கார்த்திகாயினி ஆகியோர் தொழில்நுட்பங்கள் குறித்து பேசினர்.டான்வாபி குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை ஹேமா மற்றும் கோவிந்தன் செய்தனர்.

**விவசாயிகளுக்கானஅடையாள அட்டைஇன்றே கடைசி நாள்**

போளூர்:விவசாயிகளுக்கான அடையாள அட்டை பெற இன்றே கடைசி நாளாகும். போளூர் தாலுகாவில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலா ளர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. விவசாய அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தங்களுக்கு மீண்டும் வாய்ப்பளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து 2 முறை இதற்கான கால நீட்டிப்பு செய்யப்பட்டது.எனவே போளூர் தாலுகாவில் விவசாயிகளுக்கான அடையாள அட்டை இதுவரை கிடைக்கப் பெறாதவர் கள் விண்ணப்பிக்க இன்றே கடைசி நாளாகும். எனவே தகுதியுள்ள பயனாளிகள் அனைவரும் தங்களது ரேஷன் கார்டு நகல்களுடன் அந் தந்த விஏஓ.,விடம் இன்று மாலை 5 மணிக்குள் மனுக்களை வழங்கி பயன்பெறலாம்.இத்தகவலை போளூர் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் அனுஷா தெரிவித்துள்ளார்.

**பூச்சி தாக்காத வீரிய ஒட்டுரகநெல் சாகுபடி செய்தால் லாபம்: வழிகாட்டுது வேளாண்துறை**

செய்யாறு:பூச்சி தாக்காத வீரிய ஒட்டுரக நெல் சாகுபடி செய்து லாபம் காணலாம் என செய்யாறு வேளாண்துறை வழிகாட்டி உள்ளது.இது குறித்து வேளாண் துறை உதவி இயக்குனர் சாந்தி தெரிவித்துள்ளதாவது:கோ.ஆர்.எச்.3 என்ற வீரிய ஒட்டு நெல் ரகம் 115 நாட்கள் சாகுபடி கொண்ட குறுகிய கால பயிராகும். இதில் கடந்த கால உயர் விளைச்சல் ரகங்களை விட 25 சதம் கூடுதல் மகசூல் பெறலாம். சொர்ண வாரி, சம்பா, நவரை என 3 போகங்களிலும் இதை சாகுபடி செய்யலாம். இதற்கு பசுந்தாள் 6 ஆயிரம் கிலோ அல்லது 12 ஆயிரம் கிலோ தொழு உரம் போடலாம்.

இது ஒன்று போல பூக்கும் தன்மை உடையது.பச்சை தத்து பூச்சிக்கு எதிர்ப்பு சக்தி கொண்டது. வெண்முதுகு தத்துபூச்சி மற்றும் புகையானையும் தாங்கும் சக்தி, குலை நோய், துங்குரோ வைரஸ் தாங்கும் சக்தி உள்ளது. நடவு முறையில் ஏக்கருக்கு 15 கிலோ மற்றம் சென்மை நெல் சாகுபடி முறைக்கு 5 கிலோ போதுமானது. நடவு மற்றம் நாற்றங்கால் வயல்களில் நோய்களின் சேதநிலையறிந்து பயிர் பாதுகாப்பு செய்யலாம். உர அளவுகளும் மிக குறைவாக பயன்படுத்திடலாம்.பயிர் பூத்த 30 முதல் 35 நாட்களில் இதை அறுவடை செய்திடலாம். எக்டோருக்கு 7 ஆயிரத்து 500 கிலோ சாகுபடி செய்யலாம். மேலும் விபரம் வேண்டுவோர் வேளாண் உதவி இயக்குனர், சாந்தி, 04182-222248, 98423 17815என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வறண்ட பூமியில் பூத்துக் குலுங்கும் பட்டுரோஸ் : நல்ல பலன் தருவதாக விவசாயி மகிழ்ச்சி**

காரியாபட்டி : வறண்ட பூமியில் பூத்துக் குலுங்கும் பட்டுரோஸ் விவசாயம் நல்ல பலன் தருவதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.
விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே உள்ள மல்லாங்கிணர் பகுதி.  இது வானம் பார்த்த பூமி.  இந்த வறண்ட

பூமியில் எத்தனை நாளைக்குத்தான் சோளம், துவரை, எள், கம்பு, கேப்பை போன்ற பயிர்களை பயிரிடுவது. இது போன்ற விவசாயத்தில் விடிய விடிய வேலைப் பார்த்து பின்னர் கணக்குப் பார்த்தால் கூலிகூட மிஞ்சாது என்பார்கள். அந்தளவுக்கு உழைத்து தேய்ந்து போன நிலமும்சரி, விவசாயிகளும்சரி நொந்து வெந்துபோய் கிடக்கின்றனர். வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. அப்படியே வந்தாலும் விவசாயத்தில் கிடைக்கும் வருமானத்தையே கூலியாக கொடுக்க வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் பார்த்து வெறுத்துப்போன விவசாயிகளுக்கு மழையும் கை கொடுக்கவில்லை. வருண பகவான் கொடுக்கிற மழையில் விவசாயித்தை தொடர நினைக்கும் விவசாயிகளுக்கு வருணபகவான் கருணை காட்டாததால் நஷ்டத்தில்தான் முடிகிறது. விளைச்சல் நிலங்கள் தற்போது விலை நிலங்களாக மாறி பசுமையாக இருந்த காடுகள் பிளாட்டுகளாக மாறி வருகிறது. விவசாயத்திற்கு ஆட்களை இனி வேலை வாய்ப்பு முகாம்களில்தான் எடுக்க வேண்டும் என்ற நிலை உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நிலைமை தலைகீழாக மாறி வரும் இந்த காலகட்டத்தில், 10க்கும் மேற்பட்ட ஏக்கரில் மல்லாங்கிணர் பகுதி விவசாயிகள் துணிச்சலுடன் காய்ந்த பூமியில் பட்டு ரோஸ் செடிகளை வளர்த்து வருகின்றனர். எங்கு பார்த்தாலும் சருகுகளாய் காட்சியளிக்கும் காடுகளில் பட்டுரோஸ் செடிகள் கண்களுக்கு விருந்தாய் கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. ஐந்தாண்டுகள் வரை பலன் கொடுக்கும் பட்டு ரோஸ் செடிகள் விவசாயிகளுக்கு புத்துணர்வை ஏற்படுத்துகிறது. தினமும் லாபம் கிடைக்கும் தொழிலாக இருப்பதால் வீட்டில் உள்ளவர்களே ஆர்வத்துடன் பூக்களை பறித்து மார்க்கெட்டுக்கு அனுப்பிவிடுகின்றனர். குறைவான வேலை நிறைவான வருவாய் என விவசாயிக்கு மகிழ்ச்சி தருவதால் மற்றவர்களும் இதுபோன்ற விவசாயத்தை தொடர அரசு ஊக்குவிக்க வேண்டும்.

இது குறித்து மாரியப்பன்நாயக்கர் கூறியதாவது: பட்டுரோஸ் தண்டுகளை வாங்கி இயற்கை உரங்களை இட்டு நடவு செய்து வாரத்திற்கு 2 முறை தண்ணீர் விட்டால் போதும். 3 மாதங்களிலே பூ பூக்க துவங்கும். அவ்வப்போது பூச்சி தாக்காமல் இருக்க மருந்து தெளிக்க வேண்டும். நாட்டு ரோஸைவிட பட்டு ரோசுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் சீசனுக்கு ஏற்றவாறு நல்ல விலை கிடைக்கும். சாதாரணமாக ஒரு பூ ஒரு ரூபாய்க்கும், விஷேச நாட்களில் 10 ரூபாய்க்கும் விற்கும். ஆண்டுக்கு ஏக்கருக்கு 30 ஆயிரம் வரை செலவு ஆகும். லாபம் மட்டுமே 40ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம்வரை கிடைக்கும். வேலைக்கு ஆட்கள் தேவையில்லை. நாங்களே தினமும் ஆயிரத்திலிருந்து 2 ஆயிரம் பூக்கள் வரை பறித்து மதுரை,விருதுநகர் மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகிறோம். 5 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும் இந்த விவசாயத்தால் போதுமான வருவாய் கிடைப்பதால் மனநிறைவுடன் இருக்கிறோம் என்றார்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிவண்ணன் கூறியதாவது: சொட்டு நீர்ப்பாசனங்கள் மூலம் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும், 15 சதவீத உரமும் வழங்குகிறோம். தேவையான அறிவுரைகளை நேரிலே சென்று வழங்குவதற்கும் தயாராக இருக்கிறோம். அரசு திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி மானியத்தை பெற விவசாயிகள் முன்வரவேண்டும் என்றார்.

**செம்மை நெல் சாகுபடி செய்யும் 20 ஆயிரம் விவசாயிகளுக்கு கடன் அட்டை வழங்க முடிவு**

சிவகாசி : செம்மை நெல் சாகுபடி செய்யும் 20 ஆயிரம் விவசாயிகளுக்கு கிஷான் கிரிடிட் கார்டு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளை செம்மை நெல் சாகுபடி செய்ய அரசு வலியுறுத்துகிறது. செம்மை நெல் சாகுபடியில் வழக்கமான மகசூலைவிட 20 முதல் 30 சதவீத மகசூல் அதிகரிக்கும். ஏக்கருக்கு 25 கிலோ நெல் விதை பயன்படுத்துவதற்கு பதிலாக 3 கிலோ விதை நெல் போதுமானது. ஏக்கருக்கு எட்டு சென்ட் இடத்தில் நாற்றாங்கால் அமைப்பதற்கு பதிலாக ஒரு சென்ட் இடத்தில் நாற்றாங்கால் அமைத்தால் போதுமானது, அதிக நீர் செலவு ஏற்படாது என வேளாண் அதிகாரிகள் ஆலோசனை கூறி வருகின்றனர். ஆனாலும் விவசாயிகள் செம்மை நெல்சாகுபடியில் ஆர்வம் இன்றி உள்ளனர். செம்மை நெல் சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு புதிய சலுகை அறிவிக்கப் பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் 20 ஆயிரம் பேருக்கு கடன் அட்டைகள் (கிஷான் கார்டு) வழங்கப்பட உள்ளது. கிஷான் கார்டு வைத்திருக்கும் விவசாயிகளுக்கு தங்கள் பகுதியில் உள்ள

வங்கிகளில் ரூ.50 ஆயிரம் வரை பிணையம் இன்றி கடன் வழங்க அனுமதிக்கப்படும்.
வேளாண் துறை அதிகாரிகள் கிஷான் கார்டு வழங்குவதற்கான பயனாளிகளை தேர்வு செய்து வருகின்றனர். மூன்று ஆண்டுகளில் காரீப், ராபி பருவங்களில்பயிர் சாகுபடி செய்துள்ள விபரம், சிறு, குறு, பெரிய விவசாயிகள் பட்டியல் தயார் செய்து வருகின்றனர். சிவகாசி உட்பட ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஆயிரம் கடன் அட்டைகள் வழங்கப்பட உள்ளது.

**பி.ஏ.பி., முதலாம் மண்டல தண்ணீர் இன்று திறப்பு**

உடுமலை : திருமூர்த்தி அணையிலிருந்து, பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத் திற்கு இன்று காலை 9.30 மணிக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தின் மூலம் , கோவை, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 94,446 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

திருமூர்த்தி அணையிலிருந்து முதலாம் மண்டல பாசனத்திற்கு, 135 நாள் மண்டல பாசன காலத்தில், 90 நாட்கள் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டது. முதலாம் மண்டல பாசனத்திற்கு மொத்தம் 9012 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படுகிறது. அதே போல், தளி கால்வாய் பாசனத்திற்குட்பட்ட ஏழு குளங்களுக்கு மூன்று முறை நிரப்ப, 390 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கவும் அரசு அனுமதியளித்துள்ளது. திருமூர்த்தி அணையிலிருந்து, பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு இன்று காலை 9.30 மணிக்கு, பி.ஏ.பி., பிரதான கால் வாயில் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதற்கான விழாவில், பி.ஏ.பி., அதிகாரிகள், பாசன சங்க நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

**இளநீர் கொள்முதல் விலை அதிகரிப்பு**

பல்லடம் : இளநீர் கொள்முதல் விலை காய் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அதிகரிப்பு, பல்லடம் பகுதி தென்னை விவசாயிகளின் மனதை குளிரச்செய்துள்ளது.பல்லடம் பகுதியில் உள்ள பல்லடம், சுல்தான் பேட்டை, சூலூர் பகுதிகளில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. இப்பகுதி களில் மட்டும் 10 லட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் உள்ளன.

இளநீர் பறிப்புக்கு பின், திருப்பூர் மற்றும் கோவை, தாராபுரம், வெள்ளகோவில் உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. கடந்த இரு மாதங்களாக, பனிப்பொழிவு அதிகம் காரணமாக, தோப்புகளில் இளநீர் கொள்முதல் கடுமையாக சரிந்தது. இளநீர் கொள்முதல் விலையும் ஆறு ரூபாயில் இருந்து ஐந்து ரூபாயாக சரிந்தது.இளநீர் விற்பனைக்கு அனுப்பப்படும் ஊர் களில், கடந்த நான்கு நாட்களாக பனிப்பொழிவு குறைந்து சற்று வெயில் அடிக்கத் துவங்கியுள்ளது. இதன் காரணமாக, பொதுமக்கள் பலர் மிகவும் சுத்தமான, சத்துக்கள் நிறைந்த இயற்கை பானமான இளநீரை ஆவலுடன் வாங்கி அருந்தி வரத் துவங்கியுள்ளனர்.

இதன் எதிரொலியாக, கடந்த வாரம் வரை பல்லடம் பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளிடம் வியா பாரிகளால் ஐந்து ரூபாய்க்கு கொள்முதல் செய்யப் பட்ட இளநீர், தற்போது ஆறு ரூபாய்க்கு கொள் முதல் செய்யப்படுகிறது.இளநீருக்கு ஒரு ரூபாய் கொள்முதல் விலை உயர்வு, பல்லடம் பகுதியில் உள்ள தென்னை விவ சாயிகளின் மனதை குளிரச்செய்துள்ளது.பல்லடம், திருப்பூர், கோவை பகுதியில் இளநீர், சில்லரை விற்பனையில் 10 ரூபாயாக உள்ளது. செவ்விளநீர் சில இடங்களில் 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**ரூ.20 கோடிக்கு கொப்பரை கொள்முதல்**

பல்லடம் : பல்லடம் மற்றும் செஞ்சேரியில் உள்ள கொப்பரை கொள்முதல் மையங்களில், கடந்த 10 மாதத்தில் விவசாயிகளிடம் இருந்து 20 கோடியே 22 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில், தென்னை விவசாயிகளை நசிவில் இருந்து காப்பாற்ற, பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், செஞ்சேரி உட்பட 10 இடங்களில் அரசு கொப்பரை கொள்முதல் மையங்கள் அமைத்துள் ளது. பல்லடம் கொள்முதல் மையத்தில், விவசாயி களிடம் இருந்து புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்கள் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. செஞ்சேரியில் உள்ள கொள்முதல் மையத்தில், திங்கள் முதல் வெள்ளி வரை தொடர்ந்து கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு கிலோ கொப்பரை 44.50 ரூபாய் என கொள்முதல் செய்யப்படுகிறது. காங்கயம், வெள்ளகோவிலில் உள்ள வெளிமார்க்கெட்டில் கொள்முதல் விலை, அவ்வப்போது ஏறியும், இறங்கியும் வருகிறது.

தற்போது, வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரை விலை 36 ரூபாயாக உள்ளது. அரசு கொள்முதல் மையத்தில் கொப்பரைகளை, மிக அதிக அளவு தரம் பிரித்து கொள்முதல் செய்வதால், சிறு கொப்பரை உற்பத்தியாளர்கள் வெளி மார்க்கெட்டில், கொப்பரை கொள்முதலில் கழிப்பு குறைவு; உடனடி பணம் பட்டுவாடா; களங்களில் நேரடி கொள்முதல் ஆகியவைக்காக, வெளிமார்க் கெட்டில் கொள்முதல் விலை கிலோவுக்கு ஒன்பது ரூபாய் வரை குறைவு என்ற போதிலும், தங்களின் கொப்பரைகளை வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஏப்., முதல் தற்போது வரையிலான 10 மாதங்களில், பல்லடம் மற்றும் செஞ்சேரியில் உள்ள அரசு கொள்முதல் மையங்களில் விவசாயி களிடம் இருந்து 4,545 டன் கொப்பரை 20 கோடியே 22 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களாக, தோப்புகளில் தேங்காய் விளைச்சல் குறைவு, கடும் பனி மற்றும் தேங்காய் பறிப்பு, கொப்பரை உற்பத்திக்கு களங்களில் தொழிலாளர் பற்றாக்குறையால் வழக்கத்தை விட, 30 சதவீதம் வரை கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரி வித்தனர்.

---

தினகரன்

## விலை உயர்வை கட்டுப்படுத்த ரேஷனில் மேலும் 10 கிலோ அரிசி

பதிவு செய்த நாள் 1/22/2010 3:55:45 AM



புதுடெல்லி: அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த, இந்த மாதமும் அடுத்த மாதமும் ரேஷனில் கூடுதலாக 10 கிலோ அரிசி, கோதுமை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. விலைவாசிக்கான மத்திய அமைச்சரவை குழு கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்று நடந்தது. இதில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. ஏழைகளுக்கு மத்திய அரசின் ‘அந்த்யோதயா அன்ன யோஜனா’ திட்டத்தின் கீழ் ரேஷன் கடைகளில் இப்போது கோதுமை கிலோ ரூ.2க்கும், அரிசி கிலோ ரூ.3க்கும் மாதம் 35 கிலோ வழங்கப்படுகிறது.  விலைவாசியை கட்டுப்படுத்த, இந்த மாதமும் அடுத்த

மாதமும் ரேஷன் கடைகளில் கூடுதலாக 10 கிலோ கோதுமை அல்லது அரிசி வழங்க முடிவு செய்யப்பட்டது. இந்த கூடுதல் கோதுமை கிலோ ரூ.10.80க்கும், அரிசி ரூ.15.37க்கும் வழங்கப்படும். மாநில அரசுகள் இதை மார்ச் மாதத்துக்குள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. முதல்வர்கள் மாநாடு: விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக, முதல்வர்கள் மாநாட்டை கூட்டி விவாதிக்க வேண்டும் என்றும் பல்வேறு மாநிலங்கள் வலியுறுத்தி வருகின்றன. இந்த கோரிக்கையை ஏற்றுள்ள மத்திய அரசு, டெல்லியில் அடுத்த மாதம் 6ம் தேதி பிரதமர் தலைமையில் மாநில முதல்வர்கள் மாநாட்டை கூட்டியுள்ளது. இதில், விலைவாசியை கட்டுப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்புகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாடு முதலில் ஜனவரி 27ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. குடியரசுத் தினத்துக்கு மறுநாள் உடனடியாக டெல்லிக்கு வருவது சிரமமாக இருக்கும் என்று பல்வேறு மாநில முதல்வர்கள் கூறியதை தொடர்ந்து பிப்ரவரி 6ம் தேதிக்கு மாநாடு ஒத்தி வைக்கப்பட்டதாக மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத்பவார் கூறினார்
தமிழகத்தில் எவ்வளவு?: மற்ற மாநிலங்களில் ஏழைகளுக்கு மட்டும்தான் ரேஷன் அரிசி வழங்கப்படுகிறது. தமிழகத்தில் எல்லா தரப்பினருக்கும் வழங்கப்படுகிறது. அதனால், தமிழகத்துக்கு மாதம் 3.16 லட்சம் டன் ரேஷன் அரிசி தேவைப்படுகிறது. இதில் மத்திய அரசு, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கான 1.04 லட்சம் டன் அரிசியை, கிலோ 5 ரூபாய் 65 காசு விலையிலும் மற்றவர்களுக்கான 1.26 லட்சம் டன் அரிசியை கிலோ 8 ரூபாய் 30 காசு என்ற விலையில் வழங்குகிறது. அதுபோக, அந்த்யோதயா அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் வழங்க 65 ஆயிரம் டன் அரிசி, கிலோ 3 ரூபாய்க்கு வழங்குகிறது. மீதி அரிசியை வெளிச் சந்தையில் அதிக விலைக்கு தமிழக அரசுகொள்முதல் செய்கிறது.

தமிழகத்தில் எல்லா தரப்பினருக்கும் மாதம் 20 கிலோ அரிசி கிலோ ரூ.1 விலையில் வழங்கப்படுகிறது. 1.97 கோடி குடும்பங்கள் இதன்மூலம் பயன் பெறுகின்றனர். ஏழை மக்களுக்கான அந்த்யோதயா அன்ன யோஜனா திட்டத்தில் மாதம் 35 கிலோ அரிசி, கிலோ ரூ.1 விலையில் 18 லட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்நிலையில், விலைவாசியை குறைக்க, ரேஷனில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கூடுதலாக 10 கிலோ அரிசி வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் ஏற்கனவே கூடுதலாக அரிசி வழங்கப்படுவதால், இந்த 10 கிலோ அரிசி எந்த திட்டத்தில் தரப்படுகிறது, தற்போதைய அரிசி இருப்பு எவ்வளவு என்பதை பொறுத்தே தமிழக அரசு முடிவெடுக்கும் என்று உணவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பி.டி. கத்திரிக்காய் பயிரிடக் கூடாது**

பதிவு செய்த நாள் 1/22/2010 1:24:27 AM




பெங்களூர்: மரபணு மாற்ற (பி.டி.) கத்திரிக்காயை பயிரிட கர்நாடக அரசு தடை விதித்துள்ளது.
கர்நாடக முதல்வர் எடியூரப்பா பெங்களூரில் நேற்று அளித்த பேட்டி:
மகதாயி நதிநீர் பங்கீடு குறித்த வழக்கு கடந்த 18ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசு தனது வாக்குமூலத்தை தாக்கல் செய்தது. கர்நாடக அரசு அதை வரவேற்கிறது. கோவாவில் கன்னடர்கள் அதிகமாக வசிக் கின்றனர். எனவே, இரு மாநிலங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டியது அவசியம். குடிநீர் தேவைக்காக கர்நாடகா கேட்கும் தண்ணீரை கோவா கொடுக்க வேண்டும். இது பற்றி கோவா முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளேன்.

விவசாயிகள் பிரச்னையை மந்திர மாயங்கள் மூலம் ஒரே நாளில் தீர்க்க முடியாது. கரும்பு விவசாயிகள் பிரச்னைகளை தீர்க்க சர்க்கரை ஆலை அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படி அந்தந்த மாவட்ட பொறுப்பு அமைச்சர்களுக்கு உத்தரவிட்டு உள்ளேன். அதில் சுமூகத் தீர்வு ஏற்படும் என்று நம்புகிறேன். கர்நாடகாவின் விவசாய உறţபத்தியில் கத்தரிக்காய் 5ம் இடத்தில் உள்ளது. மரபணு மாற்ற (பி.டி.) கத்தரிக்காயை பயிரிடுவது பற்றி நாடு முழுதும் விவாதம் நடைபெறுகிறது. இதை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துகள் கூறப்படுவதால் இந்த கத்திரிக்காயை கர்நாடகாவில் பயிரிடுவது பற்றி அவசரப்பட்டு முடிவு எடுக்க மாட்டோம். தேசிய அளவில் நடைபெறும் விவாதங்களின் முடிவு, அறிஞர்களின் கருத்துகளை அறிந்த பிறகே இந்த பிரச்னையில் முடிவு எடுக்கப்படும்.

### மேட்டூர் நீர்மட்டம் 81 அடி

பதிவு செய்த நாள் 1/22/2010 12:59:41 AM



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 81.15 அடியாக குறைந்துள்ளது.
காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூருக்கு தொடர்ந்து குறைந்த அளவே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நேற்று மாலை அணைக்கு விநாடிக்கு 1083 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.
காவிரி டெல்டா பாசனத்துக்காக விநாடிக்கு 7992 கனஅடி நீர் காவிரியில் திறந்து விடப்படுகிறது. நீர் வரத்தை விட திறப்பு அதிகமாக இருப்பதால் அணை நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த 13ம் தேதி 84.39 அடியாக இருந்த அணை நீர்மட்டம் நேற்று 81.15 அடியாக குறைந்துள்ளது. அணை நீர் இருப்பு 43.11 டி.எம்.சி.

### சிவகங்கையில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் 1/22/2010 5:12:18 AM

சிவகங்கை: சிவகங்கையில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து வேளாண்மை துணை இயக்குநர் வெள்ளைச்சாமி விடுத்துள்ள செய்திகுறிப்பு: ஜனவரி மாதத்திற் கான மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம்மாதம் 22ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. கலெக்டர் மகேசன் காசிராஜன் தலை மையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை நேரடியாக தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். மேலும் இனிவரும் காலங்களில் ஒவ்வொருமாதம் 3வது வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும். இவ் வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு வன கோட்டத்தில் 30 ஆயிரம் மரக்கன்று நடவு வனத்துறை திட்டம்

பதிவு செய்த நாள் 1/22/2010 4:55:28 AM

ஊட்டி: நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் இயற்கை மரங்களின் எண்ணிகையை அதிகரிக்கும் பொருட்டு வடக்கு வன கோட்டம் சார்பில் நடப்பாண்டில் 30 ஆயிரம் மரக்கன்றுகளை நடவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தை இயற்கை மரக்காடுகள் நிறைந்த மாவட்டமாக மாற்றும் முயற்சியின் முதற்கட்டமாக வடக்கு வன கோட்டம் சார்பில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதியுதவியின் கீழ் 30 ஆயிரம் மரக்கன்றுகள் உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.மாவட்டத்தில் யானையின் வழி தடங்களாக அறிவிக்கப்பட்டுள்ள நிலங்களை அரசு கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. தொடர்ந்து இப்பகுதிகளில் வனத்துறை மூலம் புதிதாக இயற்கை மரக்கன்றுகளை நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு வடக்கு வன கோட்டத்திற்கு உட்பட்ட சிறியூர் மற்றும் ஆணைகட்டி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நர்சரியில் சந்தனம், நாவல், ஈட்டி, சீகை, ஆல், மத்தி, அரசு மற்றும் இச்சி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட வகையை சேர்ந்த மரக்கன்றுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மழைக்காலம் துவங்கும் முன் மரக்கன்றுகளை நடவு செய்ய வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளனர்.

ஆனைகட்டி, சிறியூர் பகுதிகளில் எந்தெந்த இடங்களில் எந்த வகை மரங்களை நடவு செய்வது என்பது குறித்து தற்போது தேர்வு செய்து வருகின்றனர். குறிப்பாக விலை உயர்ந்த மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய சந்தனம், ஈட்டி மரங்களை எவ்வித இடையூறும் இன்றி வளர்க்கும் வகையில் நடவு செய்வது குறித்து கள ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

முதற்கட்டமாக மாவட்ட வடக்கு வன கோட்ட அலுவலர் சவுந்திரபாண்டியன் உத்தரவின் பேரில் 2 ஆயிரம் தேக்கு மர கன்றுகள், வாழை தோட்டம் மற்றும் சிறியூர் வன பகுதிகளில் நடவு செய்யப்பட்டு பாதுகாப்பாக வளர்க்கப்பட்டு வருவதாக சிகூர் வன சரகர் மரியராஜ், வனவர் பாப்பண்ணன் ஆகியோர் தெரிவித்தனர்.